Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 12 வெள்ளிக்கிழமை (24.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 146













# ஜெனிவா கூட்டத்திற்குச் செல்வதில்லை

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு

## சிங்கள சமுகத்திடம் எதிர்ப்புணர்வை ஏற்படுத்துவது தீர்வு முயற்சிக்கு உகந்ததல்ல என்று சம்பந்தன் உறுதிபடத் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின ஜெனிவா கூட்டத்தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் பங்கு பற்றுவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி கூட்டத்தொடர் குறித்து கூட்டமைப்பின் பிந்திய நிலைப்பாடு தொடர்பாக இடம்பெற்ற கலந்தாலோசனை ஒன்றின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் வெறுப்பையும், எதிர்ப்பு உணர்வையும் தோற்றுவிக்கும் என்பதால் கூட்டமைப்பு தனது ஜெனிவா பயணத்தைத் தற்போது கைவிட்டுள்ளது.

ஜெனிவா கூட்டத்தொடரில் பங்கு பற்றி அரசுக்கெதிராக பிரசாரங்களில் ஈடுபடவேண்டும் என்று புலம்பெயர் தமிழர்கள் தரப்பும், உள்நாட்டில் உள்ள தமிழ்த் தேசியவாதக் கடும்போக்காளர்களும் கூட்டமைப்புக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்துள்ளனர்.

இவ்வாறான அழுத்தங்களையும் மீறி மேற்படி கூட்டத்தொடருக்குச் செல்வதில்லை என்று திட்டவட்டமான தீர்மானம் ஒன்றை கூட்டமைப்புத் தற்போது எடுத்துள்ளது. நேற்றைய கலந்தாலோசனையின்போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்தத் தீர்மானத்தை எடுப்பதில் மிக உறுதியாக இருந்தார். ஜெனிவாவில் பார்வையாளராகக் கலந்துகொள்ளும் நாம் அங்கு அரசுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபடுவதன் மூலம் எதனையும் சாதித்துவிடப் போவதில்லை. மாறாக அரசுக்கும் எமக்கும் இடையில் நடக்கும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத மீன்பிடி கொக்குளாயில் இருவர் கைது

முல்லைத்தீவு - கொக்கிளாய் கடல் நீரேரிப் பகுதியில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கொழும்பில் இருந்து வருகைதந்த கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் புல்மோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். இவர்களின் படகு மற்றும் வெளிஇணைப்பு இயந்திரம், மற்றும் 43 தொகுதி தடைசெய்யப்பட்ட வலைகள் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டது. கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில முன்னிலைப் படுத்தப்பட்டனர் என முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (இன்னுமொரு செய்தி 15 ஆம் பக்கத்தில்) (04)


## யாழ். முருங்கைக்காய் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளிலுள்ள இலங்கையர்களால் அதிகம் தேடப்படும் யாழ் முருங்கைக் காய் மற்றும் இலை ஆகியவற்றை யாழ்.மாவட்டத்திலிருந்து முதல் தடவையாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிககை எடுக்கப்பட்டு வருகின்றது. ஐரோப்பிய நாடுகளிலுள்ள 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மத்தியில் யாழ்ப்பாணத்து முருங்கைக்காய் மற்றும் இலை ஆகியவற்றுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதனாலேயே இவற்றை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுவருவதாக இலங்கை மத்திய வங்கியின் வடமாகாணக்கிளை (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அமைதிகாக்கும் செயற்திட்டம் சவேந்திரசில்வாவின் நியமனம் நிராகரிப்பு

### அவர் அதை மறுக்கிறார்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படையணிக்கான செயற்திட்டத்தின் உயர்மட்டக் குழுக்கூட்டத்தில் மேஜர் ஜெனரல சவேந்திரசில்வாவின் பிரசன்னம் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் மேற்படி ஐ.நா. அமைதிகாக்கும் படையணியின் உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் முதலாம் கட்டம் ஆரம்பமாகியது. இக்கூட்டத்திற்கு சவேந்திர சில்வா சமுகம் கொடுத்திருந்தார். எனினும் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே அவர் அந்த மண்டபத்தில் இருந்து வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மேற்படி மண்டபத்திற்குச் சென்று அமர்ந்திருந்தபோது அவருடன் யாரும் பேசவில்லை.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி குடிநீர் திட்டத்திற்கு 677 மில்லியன் யென் உதவி

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் நீரினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் மக்களின் சுகாதார தரத்தை மேம்படுத்தவும் சுத்தமான குடிநீரை மக்களுக்கு விநியோகிக்க விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்வளத் திட்டங்களை முழுமையாகப் புனரமைக்கும் திட்டத்துக்கு 677 மில்லியன் யென்களை உதவியளிக்க ஜப்பானின் ஜெயிக்கா நிறுவனம் இணங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சுத்திகரிக்கப்படும் குடிநீரை 42 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பரந்தன் மற்றும் இரணைமடுவிற்கு விநியோகிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 14 கிராம சேவகர் பிரிவிலுள்ள இரண்டாயிரம் பொதுமக்கள் நன்மையடைவர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

## பல்கலைக்கழகங்கள் ஸ்தம்பிதம் வேலை நிறுத்தத்தின் எதிரொலி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக நேற்று சகல பல்கலைக்கழகங்களும் செயலிழந்து போயின. இந்த வேலை நிறுத்தம் காரணமாக, விரிவுரை மண்டபங்கள், ஆய்வு கூடங்கள், நூல்நிலையங்கள் போக்குவரத்து, நிர்வாக வேலைகள், பாதுகாப்பு, சிற்றுண்டிச்சாலை போன்ற கல்விசாரா ஊழியர்களினால் வழங்கப்படும் சேவைகள் தடைப்பட்டுப்போக பல்கலைக்கழகங்களை மூடவேண்டியதாயிற்று. (15 ஆம் பக்கம் பார்க்க)

## உணவகங்களுக்கு தரச்சான்றிதழ் யாழில் அதிரடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல உணவுச்சாலைகளிலும் எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தரச்சான்றிதழ் பொதுமக்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிபபாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக உளளூராட்சி சபைகளுக்கும் 12 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கும் நடவடிக்கைக்காக அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலமாக பொது மக்களுக்கு நன்மை கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். இதே வேளை அத்தன்கய உணவுச்சாலைகளின் தரம் மீளவும் உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கும் உணவகங்களைத் தரப்படுத்தும் இந்த நடவடிக்கைக்குள் உணவகங்கள், தேனீர்ச் சாலைகள், உணவு உற்பத்தி நிலையங்கள், (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஊதியத்தை அதிகரிக்க கோரி வைத்தியசாலைகளில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஊதியம் அதிகரிக்க வேண்டும், வாழ்க்கைச் செலவை குறைத்து தமது கஷ்டங்களை குறைக்கவேண்டும் என்ற கோரிக்கைகளை அரசாங்கத்திடம் வலியுறுத்தும் முகமாக வைத்தியசாலைகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இலங்கை தேசிய வைத்தியசாலை, களுபோவில, ஜயவர்தனபுர, கராப்பிட்டிய, கண்டி, அநுராதபுரம், குருநாகலை வைத்தியசாலைகள் அடங்கலான நாட்டின் பல வைத்தியசாலைகளில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இவ்வாரம் தேசிய தொழிற்சங்க நிலையத்தினால் நடத்தப்பட்டு (15 ஆம் பக்கம் பார்க்க)

## முருகண்டியில் ஏ.ரி.எம். சேவை

முறிகண்டிப் பிள்ளையார் கோவில் பிரதேசத்தில் விரைவில் ஏ.ரி.எம் இயந்திரம் ஒன்றை அமைப்பது குறித்து கலந்தாலோசித்து வருவதாக இலங்கை மத்திய வங்கியின் வட மாகாண அலுவலகம் தெரிவித்தது. முறிகண்டிப் பிள்ளையார் கோயில் பிரதேச மக்கள் நீண்ட காலமாக தமது பணத்தேவைகளை நிறைவுசெய்வதற்கு கிளி நொச்சிப்பகுதியிலுள்ள வங்கிகளுக்கே செல்லவேண்டியுள்ளதாகவும், இதனால் தாம் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கவலை தெரிவித்திருந்தனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

## சுயதொழில் முயற்சியாண்மை விருத்தி முன்னாள் போராளிகளுக்கு பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அதிகார சபையின் முன்னேற்பாட்டில் சுயதொழில் கடன் திட்டத்திற்கான முயற்சியாண்மையை ஊக்குவிப்பதற்கான பயிற்சிப் பட்டறை நேற்றுக் காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

புனர்வாழ்வு அதிகார சபையின் யாழ்மாவட்ட அதிகாரி கோபிநாத் தலைமையில் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட இப்பயிற்சி நெறியில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமுதாயத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இப்பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டுள்ளது.

சுயதொழில் கடனுதவியாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கடன் தொகை இலங்கை வங்கியினூடாக வழங்கப்படவுள்ளது.

இக்கடன்தொகையினை 4 வீத வட்டியில் 10 வருடங்களில் மீளச் செலுத்தல் வேண்டும்.

அத்துடன் சுயதொழில் முயற்சி கடன் தொகையூடாக எவ்வாறு சுயதொழிலை தேர்ந்தெடுப்பது, அவற்றிற்கு மூலதனத்தை எவ்வாறு பகிர்ந்தளிப்பது, எவ்வாறான முயற்சியினூடாக வருமானத்தை ஈட்டமுடியும். அதற்கான திறன்களை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பாக அறிந்து கொள்வதே இப்பயிற்சிப் பட்டறையின் முக்கிய நோக்கமாகும்.

சுயதொழில் கடன் திட்டத்தில் இலங்கை வங்கியினூடாக 1500 குடும்பங்கள் உள்வாங்கப்பட்ட அதேவேளை, இப்பயிற்சிப் பட்டறையில் சுமார் 100 இற்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழ்ங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் புனர்வாழ்வு அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் ஆனந்த விஜயபால, புனர்வாழ்வு அதிகார சபையின் செயற்பாட்டு பிரதிப் பணிப்பாளர் கே.ஜனதாச, சுயதொழில் முயற்சியாண்மை ஊக்குவிப்புத் திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் வி.குசைன், இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் மாணிக்கராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (எஸ்)

## இஸ்லாமிய மார்க்கப் பணி முல்லைத்தீவில் ஆரம்பம்

யாழ். மானிப்பாய் வீதி பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளி வாசலில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் முல்லைத்தீவுக்கு இன்று அதிகாலை சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறி வாழும் முஸ்லிம் மக்களின் பெரும்பகுதியினர் முதல் தடவையாக இஸ்லாமிய மார்க்கப் பணிக்காக புறப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம், விஸ்வமடு பகுதியில் மீள்குடியேறி வசிக்கும் முஸ்லிம் மக்களுடன் ஒன்றிணைந்து மார்க்கப் பணியை மேற்கொள்வர்.

இலங்கையில் இஸ்லாமிய பணியை நீண்டகாலமாக செயற்படுத்தி வரும் தபிலீக் ஜமாத் இயக்க அங்கத்தவர்கள் உட்பட யாழ். பகுதி முஸ்லிம் மக்களும் இஸ்லாமிய மார்க்கப் ப்ணியை போதிக்கவுள்ளனர். (105)

## மீண்டும் மிரட்டுகிறது மலேரியா
## யாழ். சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மீண்டும் மலேரியா நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டிருப்பதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இத்தகவலைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட்டுக்கோட்டை, அல்லைப்பிட்டி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் மலேரியா நோய்க்கான நுளம்புகள் அதிகமாகக் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் வன்னியிலேயே மலேரியா நோய் அதிகமாகக் காணப்பட்டது. குறிப்பாக 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் இந்நோயானது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் தற்போது இந்தியாவிற்கும் ஆபிரிக்க நாட்டிற்கும் சென்றுவிட்டு திரும்பியவர்களுக்கு இந்நோயின் தாக்கம் இருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் இந்தியாவிலிருந்து திரும்பியவர்கள் 4 பேருக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்களில் 4 பேருக்கும் மலேரியா நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு செல்லவுள்ளவர்கள் அருகிலுள்ள பிராந்திய சுகாதார நிலையங்களிலும் வைத்தியசாலைகளையும் நாடி தடுப்பு மருந்துகளை இலவசமாகப் பெற்று பயன்படுத்தமுடியும்.

அத்துடன் மேற்குறித்த நாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் தமக்கு அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளில் இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலம் இந்நோயை இனங்கண்டு கட்டுப்படுத்த முடியும் எனவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## மத்தியஸ்தர் சபைக் கூட்டம் வவுனியாவில் நடைபெற்றது

வவுனியாவில் நேற்று வவுனியா மாவட்ட மத்தியஸ்தர் சபைக கூட்டம் நடைபெற்றது. பி.ப 3.00 மணியளவில் வவுனியா வைரவ புளியங்குளம் பகுதியில் உள்ள முத்தையா மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள், இலச்சினைகள் என்பன வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், பிரதேச செயலாளர் சிவபாதசுந்தரம், வவுனியா மாவட்ட சிரேஷ்ட வழக்கறிஞர் சி.சிற்றம்பலம், யு.என்.எச்.சி.ஆர் வதிவிடப்பிரதிநிதி மற்றும் வவுனியா கந்தசுவாமி கோயில் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். (125)

## மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வடக்கில் விபரம் திரட்டல் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் அமைச்சினால் அண்மையில் நாடு தழுவிய ரீதியில் உருவாக்கப்பட்டிருக்கும் கடற்றொழில் சம்மேளனத்தின் ஊடாகவே கடற்றொழிலாளர்களுக்கு மானிய விலையில் எரிபொருள் வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மானிய விலையில் எரிபொருள் பெறும் கடற்றொழிலாளர்களின் விபரங்கள் தமது பகுதி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு மாவட்ட கடற்றொழில் சம்மேளனத்தின் சிபார்சினைப் பெற்று இவ் எரிபொருள் மானியத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் அந்தந்த பகுதி கிராமிய கடற்றொழில் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

இம் மானிய எரிபொருள் வழங்கல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்படமாட்டாது எனவும் அவ அதிகாரி குறிப்பிட்டார்.

இதில் பல நாள் கடற்கலங்களைப் பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கு தலா 2500 லீற்றர் டீசல் மானிய விலையில் வழங்கப்படவுள்ளது.

அதேபோல் ஒரு நாள் கலம் பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கு தலா 1500 லீற்றர் டீசல் மானிய விலையில் வழங்கப்படவுள்ளது.

கட்டுமரம், வள்ளம் ஆகியவற்றில் வெளியிணைப்பு இயந்திரம் பொருத்தி பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கு தலா 250 லீற்றர் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கப்படவுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தின்படி டீசலுக்கு 12 ரூபா மானியமும், மண்ணெண்ணெய்க்கு 25 ரூபா மானியமும் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும மாதாந்தம் இவ் எரிபொருள் மானியம் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது.(பா)

### மெய்வல்லுநர் போட்டி

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.வாகீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன், திருமதி இ.குபாகரி இளங்கோவன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக ஏ.எம்.ரி. இரான்ஸ்போட் தலைவர் ஏ.எம்.தனநாயகம், கௌரவ விருந்தினராக யாழ. கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் என்.ஸ்ரீமுருகதாஸ்காந்தன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளர். (135)

### சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1285)

## ஆலய விக்கிரகங்கள் திருட்டு இரு சந்தேகநபர்கள் கைது

(யாழ்.நிருபர்)

காரைநகர் பலகாடு இராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலில் கடந்த 19 ஆம் திகதி இரவு அம்மன் சிலை மற்றும் பிள்ளையார் வெண்கல சிலைகள் திருடப்பட்டன.

மறுநாள் காலையில் கோயிலுக்கு சென்ற குருக்கள், நிர்வாக சபையினரை உடனடியாக தொடர்பு கொண்டு கிராம அலுவலரின் உதவியுடன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து திருட்டுடன் சம்பந்தப்பட்டவர்களென சந்தேகத்தின்பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். ஐந்து சந்திப்பகுதியைச் சேர்ந்த இரும்பு வியாபாரம் செய்யும் இவர்கள் காரைநகரில் பழைய இரும்பு கொள்வனவு செய்யவென வந்த சமயம் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். இவ் விக்கிரக திருட்டு சம்பந்தமாக பொலிஸார் மற்றும் படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (10)

## விசேட தேவையுடையோருக்கான கூட்டம்

(வேலணை)

விசேட தேவைகள் உடைய இளைஞர் யுவதிகளுக்கு பொதுக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பொதுக்கூட்டத்தில் 29 வயதுக்குட்பட்ட விசேட தேவைகள் உடைய இளைஞர், யுவதிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (05)

## மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கூட்டம்

அரியாலை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று பி.ப. 2.00 மணிக்கு அரியாலை கிழக்கு ஸ்ரீமுத்தி விநாயகர் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் பா.நந்தினி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை பூம்புகார் கிராம அபிவிருத்திச் சங்க கூட்டம் பி.ப. 4.00 மணிக்கு தலைவர் எஸ்.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஐந்து ஆண்டுத் திட்டம் தயாரிப்பு வடமராட்சியில் விசேட செயலமர்வு

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் 5 ஆண்டுத் திட்டம் தயாரிப்பதற்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க பாடசாலை ஆசிரிய வள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சகல அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அமுலாக்கல் திட்டத்தையும் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்டத்தையும் கலந்துரையாடலுக்கு வரும்போது கொண்டுவருமாறு வடமராட்சி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.சுகுமாரன் அறிவித்துள்ளார். (109)

ஆன்மீகம் எந்த ஒரு நாட்டுக்கும் உரித்தான ஏகபோக உரிமையல்ல. எந்த இடத்திலும் அடக்கிவைக்க முடியாத காற்றுப்போன்றது. அவ் ஆன்மீகக் காற்று உலகெங்கும் வீசட்டும் - சாயிபாபா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## புதைமணலின் சரிவிலிருந்து மீள...

ஆக்கபூர்வமான எந்த விளைவுகளுக்கும் முயற்சிக்காமலே, சும்மா அரசை எதிர்த்துப் பேசிக்கொண்டிருப்பதிலும், தற்போதைய அரசுக்குச் சங்கடங்கள் நேரும்போது அவ்வப்போது மகிழ்ந்து கொண்டிருப்பதிலும் வருடங்களைச் செலவிட்டுக் கொண்டே வரும் சமூகம் தன் சரிவிலிருந்து மீள முடியுமா?

இந்த மகிழ்ச்சியும் திருப்தியும் வெற்று ஆவேசமும் அரசியல் கதிரைகளைப் பிடிப்பதற்கு உதவலாம்; பத்திரிகை – இணையத்தள வியாபாரத்திற்கு உதவலாம்; புலம்பெயர்ந்த மக்களிடம் பணம் சேகரிப்பதற்கு உதவலாம்; அரச அதிகாரத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும் முற்போக்காளர் என்கிற முகத்தைக் காட்ட உதவலாம்... வருத்தமுற்றுச் சீவிக்கும் மக்களை வாழவைக்க உதவுமா? அல்லது உதவுகிறதா என்பதை சிந்தனை சக்தியுள்ளவர்கள் தயைகூர்ந்து யோசிக்க வேண்டும். தங்கள் மௌனம் கலைத்துப் பேசவேண்டும்.

இல்லையேல், எங்கள் சமூகத்தின் நிலைமைகள் மாறும் என்று தோன்றவில்லை. நாங்கள் வீம்புக்கு அழியும் பழங்குடிச் சமூகமாகவே எங்கள் சிந்தனையை வைத்துக்கொண்டிருக்கிறோம் என்ற குற்றச்சாட்டை, நம்மில் யாராவது தர்க்கரீதியாக மறுத்துப் பேச முடிந்தால் உண்மையிலேயே சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்.

எங்கள் துன்பங்களைச் சொல்லிச் சொல்லி அரற்றியே உணர்ச்சி வசப்பட்டு மேலும் மேலும் துன்பங்களை வரவழைத்து அழிந்த ஒரு புத்திசாதுரியமற்ற சமூகம் என்று உலகுக்கு காட்டிக் கொண்டுவிட்ட வெட்கம் இப்போது நம்மைக் கவ்வியிருக்கிறதா இல்லையா?

எங்களுக்கு வெளியே எதிரிகளைச் சொல்லி அழித்தபடியும் அழிந்து கொண்டுமிருந்த நாம் இப்போதேனும் விவேகமற்ற ஆவேசங்களை விட்டுவிட்டு நிதானமடைய வேண்டும். நம்முடைய பெருமளவு துன்பங்களுக்குக் காரணம் நாங்கள்தான் என்பதைச் சரிவர உணர்ந்து கொள்ளாத வரை நாம் மீட்சி பெறப்போவதில்லை.

நம் இன்னல்களுக்குக் காரணமாக ஒவ்வொரு காலகட்டத்திலும் பலப்பலரைச் சுட்டிக்காட்டி, அவர்களை இல்லாமல் செய்துவிட்டால் நம்முடைய சுபிட்ச வாழ்க்கை இதோ வந்துவிடும் என்று சொல்லிச் சொல்லியே அல்லது நம்பி நம்பியே அவர்களை அழித்தும் எதிரிகளாக்கியும் வந்திருக்கிறோம். இப்போதும் இந்த அரசாங்கம் தொலைந்துவிட்டால் நமக்கான தீர்வு வந்துவிடும் என்ற புகைமூட்டமான நம்பிக்கைக்கு அப்பால் வேறேதும் நம்மிடம் திட்டமிருப்பதாகத் தெரிகிறதா?

நாங்களே அதிகம் துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்; மற்றவர்கள் எல்லோரும் நம்மை அனுதாபப்பட்டு நமக்காகவே செயல்பட வேண்டும்; இல்லாவிட்டால் அவர்களை எல்லாம் எதிரிகளாகவே விலக்கி விட்டுக்கொண்டிருப்போம் என்னும் பாணியில் செயல்பட்ட எங்கள் தேசியப் பொங்குகையே இத்தனை அழிவுகளையும் கொண்டுவந்து சேர்த்தது. இதற்குக் காரணமாக இருந்தவர்கள் ஆயுதமேந்தியவர்கள் மட்டுமல்ல; யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் பொங்கிய நம்மெல்லோர் மனநிலையும்தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

குறிப்பாக, எழுதியும் பேசியும் ஆவேசமூட்டியும் சிதைவுகளைக் கொண்டாடும் ஒரு விவேகமற்ற எழுச்சியைப் போஷித்து இன்றைய சமூகப் பேரழிவை உண்டாக்கியவர்கள், தங்கள் தவறுகளைச் சொல்லி சுயவிமர்சனம் செய்துகொள்ளாமல், மக்களைத் தொடர்ந்தும் ஆவேசப்பயணத்தில் இழுத்துச் சென்றுகொண்டிருப்பதுதான் மாபெரும் துரோகமாகும் என்பதை அறியவேண்டும்.

மாயப் புளுகத்தில் ஆழ்த்தி நம்மைப் படுகுழியில் இறக்கிய ஆவேசச் சிந்தனைகளை நாம் இப்போதாவது இனங் கண்டுகொள்ள வேண்டும். யதார்த்தத் தளத்தில் நின்று எங்களது தேவைகள் உணர்ந்து விழிப்படைய வேண்டும்.

கடந்த இருபதாண்டுகளில் நம் சமூகத்தின் சிந்தனையும் நினைப்புகளும் நடவடிக்கைகளும் எப்படி இருந்தன என்பது பற்றிய ஒரு கறாரான விமர்சனப் பார்வையை இப்போதேனும் நாம் மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் பொய்மை ஆவேசங்களிலேயே நாம் மறுபடியும் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்க நேரிடும். - ஆசிரியர்

# ஐ.தே.க. புலிகள் ஒப்பந்தமே நாடு அழிவை சந்திக்க காரணம்

## கொமின் தயாசிறி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரம்சிங்கவிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை நாட்டுக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தியதாக பிரபல சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பத்து ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நிலையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் மூலம் நாட்டுக்கு மதிப்பீடு செய்ய முடியாத அளவிற்கு அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. பயங்கரவாத அமைப்பாக கருதப்பட்டு வந்த புலிகளுக்கு, ரணில் விக்ரமசிங்க சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்ததாக சட்டத்தரணி கொமின் தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னரே புலிகள் சர்வதேச நாடுகளுடன் நேரடித்தொடர்புகளைப் பேண ஆரம்பித்தனர். அது மட்டுமின்றி, சுனாமி நிவாரணக் குழுவின் ஊடாக புலிகள் பாரியளவில் வெளிநாட்டு உதவிகளைப பெற்றுக் கொண்டதாக கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

# நாளொன்றுக்கு 180 மெகாவாற் மின்சாரம் சேமிக்கும் திட்டம்

(கொழும்பு)

ஒரு நாளைக்கு 180 மெகாவாற் மின்சாரத்தை சேமிக்கும் திட்டம் ஒன்றை அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்க உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைசசர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் மின்சாரக் கட்டணத்துக்கு எரிபொருள் கட்டணம் மேலதிகமாக சேர்க்கப்பட்டமை தொடர்பாக விளக்கமளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்.

தேசிய மட்டத்தில் மின்சார சிக்கனப்படுத்தல் வேலைத்திட்டமொன்றை அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுளளது. தற்போது 24 மணி நேரமும் மின்சாரத்தை தொடர்ச்சியாகத் வழங்கிவரும் ஒரே நாடு இலங்கையாகும்.

எமது அயல் நாடுகளான பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் மின்வெட்டு தற்போதும் அமுலில் இருந்துவருகின்றது.

அரசாங்கம் தற்போது எரிபொருளுக்கான விலையை அதிகரித்துள்ளமையால் இலங்கை மின்சார சபைக்கு கூடுதலாக 40 பில்லியன் ரூபா செலவு செய்வதாகவும் பாவனையாளர்களிடம் இருந்து 28 பில்லியன் ரூபாவை மாத்திரமே விற்பனை மூலம் பெற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடெங்கிலும் 6.30 மணி தொடக்கம் 9.30 மணி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 2000 மெகாவாற் மின்சாரம் செலவு செய்யப்படுகிறது. இவற்றில் கைத்தொழிற்துறைக்கு 40 சதவீதமும் வீட்டுப் பாவனைக்கு 60 சதவீதமும், செலவு செய்யப்படுகின்றது. எனினும் காலை முதல் மாலை வரையில் 800 மெகாவாற் மின்சாரம் மாத்திரமே தேவைப்படுகின்றது.

பாவனையாளர்களிடம் இருந்து ஒரு அலகு மின்சாரத்திற்கு 13.37 சதத்தை மாத்திரமே அரசாங்கம் அறவிடுகின்றது. எனினும் ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக இலங்கை மின்சார சபைக்கு 21 ரூபா முதல் 55 ரூபா வரை செலவு ஏற்படுகிறது என அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை மின்சார பாவனையில் சிக்கனத்தை ஏற்படுத்துவதற்காக நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வு புதிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளது. நாட்டில் 46 இலட்சத்திற்கும் அதிகமானோர் மின்சாரத்தை பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பயன்படுத்துவோர் ஒரு பல்பை மாத்திரம் மாலை 6.30 மணி முதல் 9.30 வரை அணைத்தால் ஒரு நாளைக்கு 180 மெகாவாற் மின்சாரத்தை சேமிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்

# அல்லைப்பிட்டி மக்களுக்கு மண்ணெண்ணெய் நிவாரணம்

(தீவகம்)

வேலணை பிரதேச செயலகத்தினால் இலவச மண்ணெண்ணெய்க்கான நிவாரண முத்திரை வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் முதல் கட்டமாக சமுர்த்திப் பயனாளிகள் 50 பேருக்கு வழங்கப்பட்டதுடன் மின்சாரமற்ற கிராமங்களில் வாழந்து வரும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவ் நிவாரண முத்திரை வழங்கப்பட்டது.

மேலும் வேலணை பிரதேச சபை எல்லைக்குள் மொத்தமாக 2 ஆயிரத்து 520 பயனாளிகளுக்கு இவ் நிவாரண முத்திரை வழங்கப்படும் எனவும் அத்துடன் மாதம் ஒன்றுக்கு 200 ரூபா வீதம் 6 மாதத்திற்கான முத்திரைகளும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதேச செயலர் கிருபாகரமூர்த்தி, ஈ.பி.டி.பி. யின் வேலணைப் பிரதேச அமைப்பாளரும் வேலணைப் பிரதேச சபையின் தவிசாளருமான சி. சிவராசா, திட்டமிடல் பணிப்பாளர் மீரா, வேலணைப் பிரதேச சமுர்த்தி முகாமையாளர் நகுலராணி மற்றும் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர். (85)

## தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு சுயதொழில் கடன்வழங்கல் ஏற்பாடு

(கிளிநொச்சி)

புனர்வாழ்வு முகாம்களில் இருந்து தொழிற்பயிற்சி பெற்றவர்கள் சுயதொழிலில் ஈடுபடுத்துவதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலகம் சுயதொழில் கடன் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபடடுள்ளது.

இக்கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக விண்ணப்பப் படிவங்கள் கிராம அலுவலர்கள் ஊடாக கடந்த செவ்வாய் முதல் வழங்கப்பட்டு வருகிறது. இச் சுயதொழில் கடன் திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 700 பயனாளிகளுக்கு இக்கடன் வழங்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. கடன் வழங்கும் விண்ணப்பப் படிவத்தில் அவர்கள் விரும்பும் தொழில் தொடர்பாகவும் கேட்கப்பட்டுள்ளது. (142)

## எரிபொருள் மானிய முத்திரை முழுமையாக கிடைக்கவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 34 ஆயிரத்து 575 குடும்பங்கள் மின்சாரம் எதுவுமின்றி வாழ்ந்துவரும் நிலையில் அவர்களுக்கு முழுமையாக எரிபொருள் மானிய முத்திரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் எரிபொருள் மானிய முத்திரை 14 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டும் வந்திருப்பதாகவும், ஆகக்குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கே இம் முத்திரை வழங்கப்பட்டு வருவதாகவும், எஞ்சியுள்ள 20 ஆயிரத்து 575 குடும்பங்களுக்கு முத்திரை வழங்குவதற்கு சமுர்த்தி அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.(142)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் தொடரும் வைத்தியர்களின் பற்றாக்குறை

## நோயாளர்கள் சிகிச்சை பெறுவதில் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்திலிருந்து கடந்த 1983 ஆம் ஆண்டுக்குப் பின் 126 மருத்துவர்கள் வெளியேறியுள்ள நிலையில் இன்று வரை இங்குள்ள வைத்தியசாலைகளில் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதுடன் இதனால் இங்குள்ள பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

கண்டாவளை உள்ளிட்ட பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகள் மருத்துவர்கள் இன்றி இதுவரை திறக்கப்படாமல் மூடப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி, முழங்காவில், தர்மபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

இவ்வாறு மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதால் இங்குள்ள மக்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், குறிப்பாக சிறுவர்களும், முதியோரும், கர்ப்பிணித் தாய்மாரும் மிகுந்த கஷ்டங்களை அனுபவிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இம்மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேறி 2 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மக்களும் பெருமளவில் வாழ்ந்து வருவதுடன் வாழ்வாதார ரீதியாக ஓரளவு முன்னேற்றம் கண்டும் வருகின்றனர்.

இந்த நிலையில் இம்மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுமிடத்து மக்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கோ, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கோ பணத்தைச் செலவளித்துச் செல்லவேண்டிய தேவை ஏற்படாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இம்மாவட்டத்திலுள்ள மக்களின் மருத்துவத் தேவையைக் கருத்திற்கொண்டு இங்கு வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு மருத்துவர்களை நியமிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# சமய பாட ஆசிரிய ஆலோசகர்களின் விபரங்கள் சமர்ப்பிக்க அறிவுறுத்தல்

(வலிகாமம்)

வடமாகாண கல்வி வலயங்களில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் சைவநெறிப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் விபரங்களை, தேசிய கல்வி நிறுவக உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி கொட்வின் கொடித்துவக்கு கோரியுள்ளார்.

இவர்களிற்குப் பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பில் செயலமர்வினை மேற்கொள்ளும் பொருட்டே இந்த விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களிலும் சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரிய ஆலோசகர்கள், தேசிய கல்வி நிறுவகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பெற்று, வலய சைவசமய பாட உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு ஊடாக மாகாண சமயபாட உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

மாகாணக் கல்வித் திணைக்களம், மேற்படி விபரங்களை செயற்றிட்ட அதிகாரி, (இந்து சமயக் கல்வி) சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும் படியும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் இல்லாத கல்வி வலயங்கள் பாடத்திற்குப் பொருத்தமான ஆசிரியர்களின் விபரங்களை அனுப்பிவைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)






இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி கிழக்குப் பிரிவின் தொண்டர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் த.கணேசமூர்த்தி உரையாற்றுவதையும், அருகில் பிரிவுத் தலைவர் கொ.அ.ஸ்ரனிஸ்லோஸ் அமர்ந்திருப்பதையும், செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தொண்டர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் காணலாம். (70)

## பேடன்பவல் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் சாரணர் தலைவா பேடன்பவல் தின நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல்.3 மணிக்கு யாழ்.வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட சாரணர் சங்கத் தலைவர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (109)

## பொதுக் கூட்டம்

சாவகச்சேரி நகர சபையின் மீசாலை பொது நூலகத்தின் நூலக அபிவிருத்தி ஆலோசனைக் குழு பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூலக அபிவிருத்திக்கு மீசாலை பொதுநூலக எல்லைக்குட்பட்ட வாசகர்களையும் நலன் விரும்பிகளையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு நூலக வளர்ச்சிக்கு வேண்டிய கருத்துக்களை வழங்கி உதவுமாறு நகராட்சி மன்றச் செயலர் அறிவித்துள்ளார். புதிய அங்கத்தவர்களுக்கான தெரிவும் இக்கூட்டத்தில் நடைபெறவுள்ளது. (11)

# ஐ.ஒ.எம்.நிறுவன நிதியுதவியின் கீழ் தாளையடியில் ஐஸ் தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் தாளையடிப் பகுதியில் ஐஸ் தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியுதவியினை ஐ.ஒ.எம்.நிறுவனம் வழங்கவுள்ளதாகவும் இதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளில் தற் சமயம் அந்நிறுவனம் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ் ஐஸ் தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகளுக்கான கேள்வி மனுக் கோரிக்கைகள் தற்சமயம் பரிசீலிக்கப்பட்டு வருவதுடன் இந்நடவடிக்கை முற்றுப் பெற்றதும் குறித்த தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

தற்சமயம் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தம்மால் பிடிக்கப்படும் கடலுணவுகளைப் பதப்படுத்தி வைப்பதற்குத் தேவைப்படும் ஐஸ் கட்டிகளை யாழ். நகரில் இருந்தும், வவுனியாவில் இருந்தும் எடுத்து வந்து கடலுணவுகளைப் பதப்படுத்த வேண்டிய நிலை தொடர்ந்து வருகின்றது.

மேற்குறித்த பகுதியில் ஐஸ் தொழிற்சாலை ஒன்று அமையுமிடத்து இப்பகுதி மீனவர்களின் மேலதிக சிரமம் குறைக்கப்படுவதுடன் அவர்களது வாழ்வாதாரமும் மேம்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (பா)

# சமுர்த்திப் பயன்பாட்டுத் திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பிக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் தடவையாக சமுர்த்திப் பயன்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மாவட்டச் செயலகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்குள் பயனாளிகளை உள்வாங்குவதற்கான நடவடிக்கைககளை மேற்கொள்வதற்கு மாவட்ட செயலக சமுர்த்தி ஆணையாளராக திருமதி ஜெயராணி பரமோதயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முதற்கட்ட நடவடிக்கையாக சமுர்த்தித் திட்டத்தில் இடம் பெறவுள்ளவர்களின் குடும்ப விபரங்கள் எடுக்கப்பட்டு சமுர்த்தி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (142)

# மோட்டார் திணைக்களத்தின் காலமறிந்த சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலர் காரியாலயத்தில் இயங்கும் மோட்டார் வாகனத் திணைக்களப் பதிவுப் பிரிவினர் அதிகாலையில் குறித்த வேலை நேரத்திற்கு முன்பாக காரியாலயத்திற்கு சமூமளித்து மோட்டார் வரி அனுமதிப் பத்திரம் வழங்கும் செயற்பாட்டில் துரிதமாகவும் அர்ப்பணிப்பாகவும் கடமைபுரிவதாக வாகன உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலை 8 மணிக்கு முன்னதாக வருகை தந்து வேலை நேரத்தைக் கவனத்துக்கெடுக்காது வேலையில் இறங்கி விடுகின்றனர். அத்துடன் தற்பொழுது 'டோக்கன்' வழங்கும் நடைமுறையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வாகனப் பதிவேடு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களின் போட்டோப் பிரதிகளையும் கொண்டு வந்தவர்களிடம் பதிவுப் புத்தகத்தின் பிரதிமட்டும் போதுமானதென தெரிவிக்கப்பட்டதுன், அனாவசியமான செலவுகளைத் தவிர்க்க வேண்டிய தேவை பொதுமக்களுக்கு இருப்பதையும் சுட்டிக்காட்டியமை சிறப்பானதாக இருந்தது.

வரியனுமதிப் பத்திரம் வாகனப் பதிவு மாற்றம் (ரான்ஸ்பர்) பெறுபவர்களும் தமது வேலைகளைப் பெற்றுக்கொண்டு ஒன் பது மணிக்கு முன்பதாகவே திரும்பிச் செல்லும் நிலையில் காணப்படுவதாகவும் இதனால் தமது நேரம் விரயமாவது தவிர்க்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். (23)

# வவுனியாவில் நூறு ஏக்கரில் மர முந்திரிகைச் செய்கை

வவுனியாவில் மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக கடந்த வருடம் நான்கு பிரதேச செயலகப் பிரிவிலும் நூறு ஏக்கரில் மரமுந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மரமுந்திரிகை பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதேவேளை 'திவிநெகும' திட்டத்தின் கீழ் நான்கு பிரதேச செயலகப் பிரிவிலும் ஆயிரத்து 500 மரமுந்திரிகைக் கன்றுகள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாகவும் இதன் மூலம் செட்டிகுளம் மற்றும் நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு மரமுந்திரிகைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (125)

# மனித உரிமை பாதுகாவலர் பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான செயற்றிட்டத்தின் கீழ் "மனித உரிமைப் பாதுகாவலர்கள்" பயிற்சி நெறியினை 2011 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்த 43 பேரிற்கான சான்றிதழ்கள் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.காரியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கடந்த உலக மனித உரிமை தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட பதாகைப் போட்டியில் (பனர்) இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.காரியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

# யாழ்.போதனாவைத்தியசாலையில் 24 மணிநேர கதிரியக்க சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் "எக்ஸ்றே" பிரிவின் சேவை 24 மணிநேர சேவையாக விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை முதல் இவ்வாறு எக்ஸ்றே பிரிவின் சேவையில் மாற்றம் கொண்டு வரப்பட்டு 24 மணிநேரமும் நோயளர்களுக்கான சேவை நடைபெற்று வருவதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் நோயாளர்களுக்கான "எக்ஸ்றே" வசதியினை மேம்படுத்தும் நோக்கம் கருதி இவ்வாறு "எக்ஸ்றே" சேவை விரிவுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே யாழ் போதனா வைத்தியசாலையில் செயற்பட்டு வந்திருந்த "எக்ஸ்றே" இயந்திரங்கள் சில பழுதடைந்திருந்தமையை அடுத்து நோயாளர்களுக்கான "எக்ஸ்றே" சேவையினை வழங்குவதில் வைத்தியசாலை நிர்வாகம் நெருக்கடிகளைச் சந்தித்திருந்தது.

புதிய "எஸ்றே" இயந்திரம் ஒன்று வைத்தியசாலைக்கு வந்திருப்பதும் பழுதடைந்தவை திருத்தப்பட்டிருப்பதும் இவ் "எக்ஸ்றே" சேவையில் மாற்றம் கொண்டு வரக்கூடியதாக அமைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

கடந்த காலங்களில் "எக்ஸ்றே" பிரிவானது 12 மணிநேர சேவையையே (பகலில்) வழங்கி வந்தது தற்சமயம் பகலும், இரவும் தொடர்ந்து "எக்ஸ்றே" சேவையினை நோயாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும். (பா)

# அல்லைப்பிட்டி பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடு

(தீவகம்)

அல்லைப்பிட்டிப் பிரதேசத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் வேலணைப் பிரதேச சபையினரும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் இரண்டு டெங்கு நோயாளிகளும் இரண்டு மலேரியா நோயாளிகளும் இருப்பது அவதானிக்கப்பட்டதுடன் இங்கு பாரிய அளவில் டெங்கு நோய்க்கான மற்றும் மலேரியா நோய்க்கான காரணிகளும் இனங்காணப்பட்டதை அடுத்தே அண்மையில் மேற்படி பிரிவில் இந் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இச்செயற்பாட்டில் இப்பிரிவினர் இக்கிராமத்திலுள்ள வீடுகளுக்குச் சென்று புகையூட்டல் இரத்தப் பரிசோதனை மாசுபட்ட நீரினை சோதனை செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இச்செயற்பாடு தீவகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (85)

# வைத்தியசாலை குறைபாடு விரிவான கலந்துரையாடல்



(கோப்பாய்)

கோப்பாய்ப் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனுக்கும் கோப்பாய்ப் பிரதேச ஈ.பி.டி.பிஅமைப்பாளரும் வலி கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ச.ஐங்கரனுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை மதியம் 12.30 மணியளவில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலின் போது அமைப்பாளர் ஐங்கரனால் கோப்பாய்ப் பிரதேசவைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக விரிவாக எடுத்துவிளக்கப்பட்டது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்துக் கூறும்போது உடனடியாக குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக உறுதியளித்துள்ளார். சந்திப்பில் கோப்பாய்ப் பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி, வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரும் உடனிருந்தனர்.

# நல்லொழுக்க நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வடமராட்சி நல்லொழுக்க அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அலுவலக தலைவர் பா. ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன் சிறப்பு விருந்தினராக புலோலி தெற்கு கிராம உத்தியோகத்தர் எஸ். குமரகுருநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இக்கூட்டத்தில் இவ் அலுவலகத்திற்கு மேல் மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படவுள்ளதுடன் நிறுவனத்துக்கான இணையத்தள சேவையொன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமராட்சி நல்லொழுக்க நிறுவன செயலாளர் மு. ரவீந்திரன் அறிவித்துள்ளார். (109)

# முரசின் இன்றைய பலன்

**(24.02.2012 –வெள்ளிக்கிழமை)**

கர வருஷம் மாசி மாதம் 12 ஆம் திகதி. கிருதியை முழுவதும் நட்சத்திரம் உத்தரட்டாதி பின்இரவு 5.38 வரை. சித்தாமிர்தம் இராகுகாலம் 11.00 - 12.30 வரை. சுபநேரம் 6.30 - 8.00 வரை. எமகண்டம் 3.30 5.00 வரை. குளிகைகாலம் 8.00 - 9.30 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | செலவுகள், முயற்சியில் வெற்றி, அகால போஜனம், வாழ்க்கையில் திருப்தி. |
| ரிஷபம் | இலாபதினம், சுபகாரியங்கள், திருமணப் பேச்சு, காரியானுகூலம். |
| மிதுனம் | கௌரவம், உறவினரால் நன்மை, ஆபரணச் சேர்க்கை, வேலைவாய்ப்பு. |
| கடகம் | உல்லாசம், வாக்கு வாதம், வைத்தியச்செலவு, முதலீட்டில் கவனம். |
| சிம்மம் | உஷார்வேண்டும், ஸ்தலயாத்திரை, உடல் ஆரோக்கியம். |
| கன்னி | பெருமை, உடல்நலக்குறைவு, பொருள் தட்டுப் பாடு, சிந்தித்துச் செயற்படு. |
| துலாம் | வாழ்வில் உயர்வு, தெய்வவழிபாடு, வீண்பிரச் சினைகள், வேலைப்பளு. |
| விருச்சிகம் | புது முயற்சி, நண்பர் உதவி, தொழில் விருத்தி, நிதானம் தேவை. |
| தனுசு | புதிய முயற்சி, கடன் வசூல், குடும்பத்தில் மகிழ்ச்சி, ஆன்மீக நாட்டம். |
| மகரம் | சுபசெய்தி, புது முயற்சி, தடைக்குபின் வெற்றி, நட்பு தேடிவரும், சிக்கனம். |
| கும்பம் | பரிசு கிடைக்கும், மருத்துவச் செலவு, சொத்துக்களால் அனுகூலம், அலைச்சல் |
| மீனம் | பகட்டு வாழ்க்கை, மருத்துவச் செலவு, நண்பர்களை அனுசரித்தல், இடமாற்றம். |

# எழுத்தாளன் இலக்கியத்தை படைப்பதற்கு வாசகனும் தூண்டுதலாக இருக்க வேண்டும்

## கலாசார உத்தியோகத்தர் ரஜீவன்

(சுன்னாகம்)

பாடப்படும் களங்களும் பாடு பொருளும் வலிகளும் நிறைய உள்ளதாலேயே ஈழத்துக் கவிதைகள் வீச்சும் வீரியமும் மிக்கதாக மிளிர்கின்றது இதனாலேயே ஈழத்து படைப்பாளிகளின் படைப்புக்கள் சர்வதேச மட்டத்தில் தாக்கத்தை உண்டு பண்னுகின்றன என கிளிநொச்சி கரைச்சி பிரதேச கலாசார உத்தியோகத்தரும் கவிஞருமான கு. ரஜீவன் தெரிவித்துள்ளார். காவேரி கலாமன்றத்தின் வெளியீடாக வணக்கத்துக்குரிய ரி.எஸ் யோசுவாவின் 'கரிசக்காட்டுப்பூக்கள்' என்னும் கவிதை நூல் வெளியீடு அண்மையில் நடைபெற்ற போது வெளியீட்டுரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

படைப்பாளிகளால் படைப்புக்கள் வெளியிடப்படும்போது அதை வாங்கிச் செல்பவர்களின் வீட்டின் அலுமாரிகளில் அவை தூசி பிடிக்க தூங்கிக் கொண்டிருக்கின்றன.

படிப்பவர்கள் யாரும் இல்லை. வாசகன் இல்லாத இலக்கியம் எவ்வாறு வளரும்.பணம் கொடுத்து புத்தகங்கள் வாங்கப்படவில்லையானால் எழுத்தாளன் புதிய படைப்புக்களை எவ்வாறு பதிக்கமுடியும். எமது கலை இலக்கியங்கள் எவ்வாறு வளர்ச்சி பெறும்.

சிக்கலான நீண்ட மரபுக் கவிதைகளிலிருந்து எளிமையான புதுக்கவிதைக்கு நாம் மீண்டும் வந்து நீண்ட காலமாகிறது. அந்த வகையில் கரிசக்காட்டுப்பூக்கள் இறுக்கமான செங்கட்டமைப்பைக் கொண்டு அழகான ஆழமான கருத்தியலை வெளிக்காட்டி இன்றைய அவசர உலகுக்கு பொருத்தமான குறுங் கவிதை வடிவில் வந்திருப்பது சிறப்பானதாகும் எனஅவர் மேலும் தெரிவித்தார்.(120)

# இரத்தப் பரிசோதனைக்கு இயந்திரம் அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கென வரும் நோயாளர்கள் இலவசமாக இரத்தப் பரிசோதனை செய்வதற்கான இயந்திரமொன்றை "நிகொட்" நிறுவனம் வழங்கியுள்ளது.

இதனை வைத்தியசாலையில் பொருத்தும் பணிகள் நிறைவுற்றதும், விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களும், வெளிநோயாளர்களும் பயன்பெறவுள்ளனர்.

இதுவரை காலமும் நோயாளர்கள் தனியார் ஆய்வு கூடத்தில் பணம் செலுத்தியே இரத்தப் பரிசோதனைகளை மேற்கொண்டு வந்ததாகவும், இதனைக் கருத்திற் கொண்டே இந்நிறுவனம் இவ் இயந்திரத்தை வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)

# கலாபூஷணம் விருதுபெற்ற கலைஞர்களை கௌரவித்தல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சன சமூக நிலையமும் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கமும் இணைந்து நடத்தும் கோண்டாவில் மேற்கு கிராமத்தில் கலாபூஷணம் விருதுபெற்ற கலைஞர் களைக் கௌரவிக்கும் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு வேத பாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வி. சிவஞானசேகரம் (சங் கீதம்) செ. நடராஜா (ஊடகத்துறை) சி. நாகராஜா சிற்பக்கலை ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பாராட்டுரைகளை கோண்டாவில் மாதர் சங்கத் தலைவி திருமதி வர்தலக்ஷ்மி சோமசூரிய சிங்கம் வேதபாராயண சனசமூக நிலைய பொருளாளர் இ.சத்தியானந்தன் வேத பாராயண சனசமூக நிலைய உபதலைவர் சி. ஸ்ரீகணேசன் ஆகியோர் வழங்கவுள்ளதுடன் பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

# வவுனியாவில் ஆரம்பமாகவுள்ள சனத்தொகை கணக்கெடுப்பு

(வவுனியா)

இவ்வாண்டு இடம்பெறவுள்ள குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்புப் பணிகளின் முதற் கட்டம் நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 19ஆம் திகதி வரை சனத்தொகை தகவல் சேகரிக்கும் சுற்று ஆரம்பமாகவுள்ளதாக வவுனியா மாவட்ட புள்ளிவிபரத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவத்தார்.

இப்பணியில் ஈடுபடவுள்ள அனைத்து கணக்கெடுப்பாளர்களுக்கும் அதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பயிற்சி பெற்றவர்கள் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டு மார்ச் 20 ஆம் திகதி மற்றும் 21 ஆம் திகதிகளில் மீளாய்வு செய்வர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் மூலம் பெறப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்தியபின் தகவல் சேகரித்த படிவம் மற்றும் அதன் தொகுப்புக்களை பிரதேச செயலக புள்ளி விபர உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்படும் எனவும் மார்ச் மாதம் 23 ஆம் திகதி தவல்கள் அனைத்தும் அந்தந்த மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்படும் எனவும் தெரிவித்தார் (125)

# மேசைப்பந்தாட்டப் போட்டி யூனியன் கல்லூரி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயப் பாடசாலை களுககிடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டி கடந்த திங்கட்கிழமை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் 19 வயதின் கீழ் 15 வயதின் கீழ் ஆகிய இருபிரிவுகளிலும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

19 வயதின் கீழ் போட்டியில் 2ஆவது இடத்தை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும், 3 ஆம் இடத்தை சுன்னாகம் ஸ்கந்தவரேதயாக் கல்லூரியும் பெற்றுக்கொணடன.

இதேபோல் 15 வயதின் கீழப் பிரிவினருக்கான போட்டியிலும் முதல் மூன்று இடங்களையும் முறையே தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, ஆனைக்கோடடை றோ.க.த.க பாடசாலை ஆகியனவே பெற்றுக்கொண்டன.

முதல் மூன்று இடங்களையும் பெற்றஅணிகள் மாவட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (44)

# கிளிநொச்சி மாவட்ட செயலக விளையாட்டுப் போட்டிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுவோருக்கான விளையாட்டுப்போட்டிகளில் இன்றைய தினம் வீதி ஓட்டப போட்டிகள் நடைபெறவுள்ளது. இந்த வீதி ஓட்டப்போட்டி இன்று காலை ஏழு மணிக்கு இரணைமடுச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி மாவட்டசெயலக முன்றலில் நிறைவடையும். அத்துடன் அணிகளுக்கான கயிறிழுத்தல் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இறுதிநாள் நிகழ்வுகளும், பரிசளிப்புவிழாவும், எதிர்வரும் ஆறாம்திகதி பிற்பகல் 2.30 மணிக்கு ஜெயந்தி நகர் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை நிறைவடைந்த குழுநிலைப் போட்டிகளில் வலைப்பந்தாட்டம் பூப்பந்தாட்டம் (பெண்கள்) கரைச்சிப் பிரதேச செயலகம், கரப்பந்தாட்டம் பூப்பந்தாட்டம் (ஆண்கள்) பளை பிரதேச செயலகம், துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் பூநகரிப் பிரதேச செயலகம், ஆகிய அணிகள் வெற்றி பெற்றுள்ளன.(142)

## கரப்பந்தாட்டம்

(அளவெட்டி)

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள், நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

சங்கானை சிவப்பிரகாச மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிகள் 15,17,19 வயதுப் பிரிவென மூன்று பிரிவுகளாக நடைபெறும். போட்டிகள் யாவும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. (93)

## இல்ல மெய்வல்லுநர்போட்டி

(அளவெட்டி)

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள்து.

அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா பிரதம விருந்தினராகவும், மக்கள் வங்கியின் அளவெட்டிக்கிளை முகாமையாளர் இ.சிவகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (93)



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியுடனான உதைபந்தாட்டப்போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வீரர்களைக் காணலாம்.

(படம் - தயாளபாலன்)

# துணைத் தலைவராக ஜெயவர்தன

(புதுடில்லி)

டில்லி டேர்டெவில்ஸ் அணியின் துணைக் கப்டனாக ஜெயவர்தனா நியமிக்கப்பட்டுள்ளார்.



ஐ.பி.எல்., "டுவென்டி-20" தொடர் வரும் ஏப்ரல் 4ஆம் திகதி தொடங்குகிறது. இதில், சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் உள்ளிட்ட 9 அணிகள் பங்கேற்கின்றன. டில்லி டேர் டெவில்ஸ் அணியின் துணைக் கபடனாக, இலங்கையின் ஜெயவர்தனா நியமிக்கப்பட்டுள்ளார். இதனை டில்லி அணியின் கப்டன் சேவாக் வரவேற்றுள்ளார். கடந்த ஐ.பி.எல்., தொடரில் கொச்சி அணியின் கப்டனாக செயற்பட்டார். இம்முறை கொச்சி அணி, ஐ.பி.எல்., தொடரில் இருந்து நீக்கப்பட்டதால், சமீபத்திய ஏலத்தில் டில்லி அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார்

# மகாஜனாவை வீழ்த்தியது சென்.ஜோன்ஸ்

(அளவெட்டி)

இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில், 19 வயதுப் போட்டியொன்றில் தெல்லிப்பளை மகாஜனாவை 70 ஓட்டங்களால் தோற்றகடித்தது சென்.ஜோன்ஸ்.

தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி மைதானத்தில் கடந்த 17 மற்றும் 18ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெறற சென்.ஜோன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய 33 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் உதிரிகளாக ஆறு ஓட்டங்கள் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் அணி சார்பாக துவாரகன் 49, பிரிந்தாபன் 31, ரஜித்தன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிலக்ஷன், ஜெனந்தன் மற்றும் மதுசன் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தனது முதல் இனிங்ஸை ஆடிய மகாஜன அணி 32 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.சென்.ஜோன்ஸ் பந்து வீச்சாளர்களால் தாரளமாக 26 ஓட்டங்கள் உதிரிகளாக வாரி வழங்கப்பட்டது.

மகாஜனா சார்பில் அஜித் 31, சுபதீபன்12, பந்தில் 25, ரமேஸ 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பிரிந்தாபன் 4, கவாஸ்கர் 3 , இருத்திகன் 2 வக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் வீரர்களின் சிறப்பான ஒட்டத்தால் அந்த அணி 43 ஓவர்களில் 200 ஓட்டங்களைப் பெற்ற நிலை யில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் உதிரிகளாக 10 ஓட்டங்கள் கிடைத்தது.

அந்த அணி சார்பாக துவாரகன் 48, ரஜிந்தன் 47, சன்சயன் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அஜித் 36, டிலக்ஷன 2, மதுசன் ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி 271 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என இரண்டாவது இனிங்ஸில் களமிறங்கிய மகாஜனா அணி 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களைப்பெற்றது. இரண்டாவது இனிங்ஸிலும் சென்.ஜோன்ஸ் பந்து வீச்சாளர்கள் உதிரிகளாக 22 ஓட்டங்களைக் கொடுத்தனர்.

மகாஜனா அணி சார்பாக சாரங்கன் 42,அஜித 41, சுபதீபன் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அமிந்தயன் 4, ரஜிந்தன்3, சண்சயன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.(93)

# ஒருநாள் அணியில் சச்சின் கங்குலியும் எதிர்க்கிறார்

(புதுடில்லி)

இந்திய ஒருநாள் அணியில் எந்தச் சூழ்நிலையிலும் விளையாடமுடியுமா, என்பது குறித்து டெண்டுல்கர்,தனக்குத் தானே கேள்விகளைக்கேட்டுக்கொள்ள வேண்டுமென, அந்த அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஒருநாள் போட்டியில் டெண்டுல்கர் களம் இறங்குவதும், உடனடியாக ஆட்டம் இழந்து வெளியேறுவதும் அனைவரையும் பாதிக்கிறது. உலகக் கோப்பை போட்டிக்கு பின்னர் டெண்டுல்கர் தனது ஒருநாள் ஆட்டம் குறித்துச் சீர் தூக்கி பார்த்து இருக்க வேண்டும். அவர் ஒருநாள் போட்டியில் எல்லா சாதனைகளையும் நிகழ்த்தி விட்டார்.

டெண்டுல்கர் ஓய்வு பெற வேண்டியது அவசியம் என்று எந்தவொரு இந்திய அணித் தேர்வாளர்களும் சொலல மாட்டார்கள். அப்படி ஒரு சம்பவம் எப்பொழுதும் நடக்காது. தற்போது அதிக அளவில போட்டிகள் இருப்பதால் மூன்று வகை (டெஸ்ட், ஒருநாள், 20 ஓவர்) கிரிக்கெட்டுக்கான இந்திய அணிக்கு தனித்தனி கப்டன் நியமிக்க வேண்டியது அவசிய மாகும் என்றார்.

முன்னாள் கப்டன் கவாஸ்கர் கருத்துத் தெரிவிக்கையில், ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கருக்கு வருங்காலம் இல்லை என்று தேர்வுக் குழு கருதினால் அது குறித்து அவர்கள் டெண்டுலகரிடம் பேச வேண்டும். இதனை செய்ய தேர்வுச் சபைத் தலைவர் சீறிகாந்த் தான் சரியானவர்.

ஏனெனில் அவர் தான் டெண்டுல்கரின் முதல் கப்டன். சபைக் கப்டனாக இருக்கையில் தான் டெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அறிமுகம் ஆனார் என்றார்.

# மறுக்கிறது பி.சி.சி.ஐ

(மும்பை)

இந்திய அணியில் உள்ள வீரர்களுக்கு இடையில் பிளவு ஏதும் ஏற்படவில்லை. இது குறித்த எந்தத் தகவல்களும் பி.சி.சி.ஐ.க்கு கிடைக்கவில்லை. எனவே, இது ஊடகங்களால் மிகைப்படுத்தி கூறப்பட்ட தகவலாகும் என இந்திய கிரிக்கெட சபை தலைவர் என். சீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறினார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -


ஒவ்வொரு போட்டியின் பிறகும் எப்போதும் போல் பத்திரிகையாளர் சந்திப்பு ஏற்படும்.

இதில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சேவாக் பதிலளித்துள்ளார். அவரது கருத்துக்களை சரியாகப் புரிந்துகொள்ளாமல் ஊடகங்கள் தவறாக வெளிப்படுத்தியுள்ளது. இது குறித்து அணியின் ஊடக மேலாளரிடம் கேட்டுத் தெளிவுப்படுத்தப்பட்டது.

மேலும் சுழற்சி முறை குறித்த கேள்விக்கு பதிலளிக்கும்போது, போட்டியில் விளையாட இருக்கும் 11 பேரை அணியின் மேலாளர், கப்டன் மற்றும் பயிற்சியாளர் ஆகியோர் முடிவு செய்கின்றனர் எனக் கூறினார்.


# பொன் அணிகளின் போர் இன்று ஆரம்பம்

**சென்.பற்றிக்ஸ் அணி**



அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோருடன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்கள் நிற்பதைக் காணலாம்.

**வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி அணி**



அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோருடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர்கள் நிற்பதைக் காணலாம்.

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி இன்றைய தினம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்று வரும் இப்போட்டி யாழ். மாவட்டத்தில் இரண்டாவது பெரிய போட்டியாகக் கருதப்படுகின்றது.

இந்த ஆண்டில் நடைபெற்ற பல பாடசாலை மட்டப் போட்டிகளில் இரு அணிகளுமே சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்தி பல வெற்றிகளையும் பதிவாக்கியுள்ளன. எனவே, இந்த 95ஆவது பொன் அணிகளின் போரில் இரு அணிகளுமே வெற்றிக்காக கடுமையாகப் போராடும் என இரு அணிகளின் ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர். அந்த வகையில், ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களுக்கு இந்தப் போட்டி பெரும் விருந்தாக அமையும்.

## வெற்றிக்கான போராட்டம் இறுதிவரை தொடரும்



(யாழ்ப்பாணம்)

அனுபவம் வாய்ந்த பல வீரர்களை இம்முறை நாம் கொண்டுள்ளமையால் பொன் அணிகளின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெறுவதற்காக இறுதி வரை போராடுவோம் என வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பயிற்றுநர் ஆர். குகன் தெரிவித்தார்.

பொன் அணிகளின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி குறித்து எமது செய்தியாளர் கருத்துக்கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஆண்டு நடைபெற்ற பல பாடசாலை மட்டப் போட்டிகளில் பங்கு பற்றியிருக்கின்றோம். இதில் பல வெற்றிகளையும் பதிவாக்கியிருக்கின்றோம். அந்த வகையில் இந்தப் போட்டிக்கான எமது அணித்தெரிவு சிறப்பான முறையில் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.


இந்தப் போட்டியில் வெற்றியைப் பெறுவதற்காக எமது வீரர்கள் இறுதி வரை போராடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## எதிரணிக்கான நெருக்கடி கடுமையானதாக இருக்கும்

(யாழ்ப்பாணம்)

துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என அனைத்து வகையிலும் சமபலத்தை எமது அணி இம்முறை கொண்டுள்ளமையால் எதிரணிக்கு கடும் நெருக்கடியை போட்டிக் களத்தில் ஏற்படுத்துவார்கள் என்று நம்புகின்றேன். இவ்வாறு சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பயிற்றுநர் எஸ். நிசாந்தன் தெரிவித்தார்.

பொன் அணிகளின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி குறித்து எமது செய்தியாளர் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஏனைய போட்டிகளை விட இது ஒரு முக்கியமான பெரிய போட்டி. இந்தப் போட்டியில் சாதிக்க வேண்டிய சூழல் இயல்பாகவே எந்தவொரு அணிக்கும் இருக்கும் என்றே நம்புகின்றேன்.



அந்த வகையில் எமது அணி, சமபலமானது, பல அனுபவங்களைக் கொண்டுள்ளது. எனவே, போட்டிக் களத்தில் எமது அணி வீரர்கள் எதிரணிக்கு கடும் நெருக்கடி கொடுத்து வெற்றிக்காகப் போராடுவார்கள் எனவும் தெரிவித்தார்.

## வலி. வடக்குப் பிரதேச செயலக குழுப்போட்டிகள் நாளை ஆரம்பம்

(அளவெட்டி)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழுப் போட்டிகள் நாளையதினம் ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி நாளைய தினம், பெண்களுக்கான எல்லே போட்டிகள், அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறும். அத்துடன் பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டிகள் மேற்படி பாடசாலை மைதானத்தில் நாளைய தினம் காலை 11.30 மணிக்கு நடைபெறும்.

ஆண்கள்,பெண்களுக்கான கரப்பந்தாட்டம் மற்றும் வலைப் பந்தாட்டப்போட்டிகள் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் காலை 8.30 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (93)

## காரைநகர் கல்விக்கோட்ட குழுப்போட்டி முடிவுகள்

(யாழ்நிருபர்)

காரைநகர் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற குழு விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் அதிக முதல் இடங்களை யாழ்ற்ரன் கல்லூரியும், சுந்தரமூர்த்தி வித்தியாசாலையும் பெற்றுள்ளது. அதன் விவரம் வருமாறு.

**கரப்பந்தாட்டம்**
**15 வயதுப் பிரிவு**
**ஆண்கள**

முதலாமிடம் - சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், இரண்டாமிடம் - கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - யாழ்ற்ரன் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**
**ஆண்கள்**

முதலாமிடம் - சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், இரண்டாமிடம் -கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - யாழ்ற்ரன் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**
**ஆண்கள்**

முதலாமிடம் - யாழ்ற்ரன் கல்லூரி, இரண்டாமிடம் -கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்.

**15 வயதுப் பிரிவு**
**பெண்கள்**

முதலாமிடம் -சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், இரண்டாமிடம் -யாழ்ற்ரன் கல்லூரி, மூன்றாமிடம் - கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**
**பெண்கள்**

முதலாமிடம் - கலா நிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், மூன்றாமிடம் - யாழ்ற்ரன் கல்லூரி,

**19 வயதுப் பிரிவு**
**பெண்கள்**

முதலாமிடம் - சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், இரண்டாமிடம் -கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - யாழ்ற்ரன் கல்லூரி.

**வலைப்பந்தாட்டம்**
**15 வயதுப் பிரிவு**
**பெண்கள்**

முதலாமிடம் -யாழ்ற்ரன் கல்லூரி, இரண்டாமிடம் -கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**
**பெண்கள்**

முதலாமிடம் - யாழ்ற்ரன் கல்லூரி, இரண்டாமிடம் -கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**
**பெண்கள்**

முதலாமிடம் - யாழ்ற்ரன் கல்லூரி, இரண்டாமிடம் -கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம்- சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**
**பெண்கள்**

முதலாமிடம் - யாழ்ற்ரன் கல்லூரி, இரண்டாமிடம் -கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்.

**துடுப்பாட்டம்**
**19 வயதுப் பிரிவு**
**ஆண்கள்**

முதலாமிடம் - யாழ்ற்ரன் கலலூரி, இரண்டாமிடம் -கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**
**பெண்கள்**

முதலாமிடம் - யாழ்ற்ரன் கலலூரி, இரண்டாமிடம் -கலாநிதி தியாகராசா மத்திய மகா விததியாலயம், மூன்றாமிடம் - சுந்தர மூரத்தி நாயனார் வித்தியாலயம். (10)

# மனித உரிமை செயற்திட்டம் இன்று நாடாளுமன்றில் அறிவிப்பு



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைக்கு மேலதிகமாக அரசாங்கம் ஜெனீவாவில் சமர்ப்பிக்கவுள்ள மனித உரிமைச் செயற்திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படுமென ஆளும் கட்சியின் பிரதம கொரடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுனதினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வைதத கவனயீர்ப்புப் பிரேரணை அறிக்கைக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சபையில் சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக எதிர்க்கட்சித் தலைவர் பல்வேறு விடயங்களைத் தெரிவித்துள்ளார். அதற்கான பதிலை வழங்கும் அதிகாரம் நாடாளுமன்ற சபாநாயகருக்கே உரியது எனத் தெரிவித்த அமைச்சர் எனினும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை அறிக்கை இதற்கு மேலதிகமாக மனித உரிமை தொடர்பிலான அரசாங்கத்தின் தேசிய திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்குப் பதிலளிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தமது அறிக்கையில், ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைப் பேரவை அமர்வில் அரசாங்கமானது மனித உரிமையைப் பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது தொடர்பிலான இலங்கையின் செயற்றிட்டம் என்ற ஆவணத்தை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிய வருகிறது. இதுதொடர்பில் சபைக்கு அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளிக்குமுகமாகவே அமைச்சர் தினேஷ் குணவர்தன இன்று அது தொடர்பில் சபையில் விவாதிக்கப்படும் என்றார்.



எரிபொருள் விலை, மின்சாரக் கட்டணம் மற்றும் எரிவாயு விலை ஆகியவற்றை குறைக்க கோரிய கையெழுத்து வேட்டையினை மக்கள் விடுதலை முன்னணி நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முனனால் ஆரம்பித்துள்ளதனைக் காணலாம்.

## 22 பொலிஸ் அதிகாரிகள் பதவி உயர்த்தப்பட்டனர்

(கொழும்பு)





சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 22 பேர் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

2012-02-17 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சரத் பொன்சேகா தாக்கல் செய்த ஆட்சேபனை மனு 30 இல் விசாரணை

(கொழும்பு)


இரண்டாவது இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான தனது மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை ஆட்சேபித்து முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தாக்கல் செய்த மனு மீதான விசாரணை மே 30 ஆம் திகதி நடைபெறும் என உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

சரத் பொன்சேகாவுக்கு இரண்டாவது இராணுவ நீதிமன்றம் 30 மாத சிறைத் தண்டனை விதித்திருந்தது. அதை ஆட்சேபித்து பொன்சேகா தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

இந்நிலையில் மேன்முறையீட்டு நீதி மன்றத்தீர்ப்பை ஆட்சேபித்து பொன்சேகா தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை மே 30 ஆம் திகதி நடத்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் என்.ஜி.அமரதுங்க, எஸ்.ஐ. இமாம், பிரியசத் தீப் ஆகியோரடங்கிய குழாம் நேற்று தீர்மானித்தது.

## சட்டத்தரணிகள் சங்க தலைவராக விஜேதாச

(கொழும்பு)



இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவராக விஜேதாச ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவருக்கான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரிரந்த வலலியத்த, விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் தலைவர் பதவிக்காக போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்களிடம் பணம் வசூலித்தால் சமாதான நீதவான் பதவி அவுட்டாகும்

(கொழும்பு)

ஆவணங்களை உறுதிப்படுத்துவதற்காக பொதுமக்களிடமிருந்து பணம் அறவிடும் சமாதான நீதவான்களின் பதவிகளைப் பறிப்பதற்கு நீதியமைச்சு தீர்மானித்துள்ளது.

சத்தியக் கடதாசிகள் உள்ளிட்ட ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துவதற்காக சமாதான நீதவான்கள் பொதுமக்களிடமிருந்து பணம் அறவிடுவத்தாக நாடு முழுவதிலுமிருந்து நீதி அமைச்சுக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என நீதி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அத்துடன் சமாதான நீதவான்கள் அநேகர் பெருந்தொகையான பணத்தை மக்களிடமிருந்து முறைகேடாக அறவிடுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சமாதான நீதவான்கள் எவ்வித அறவீடுகளும் இன்றி இலவசமாக தமது சேவையை வழங்க வேண்டுமென்பதை நீதியமைச்சு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. நீதி அமைச்சினால் வழங்கப்படும் நியமனக் கடிதத்திலும் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு துறைமுகத்தில் ஜப்பான் கடற்படை கப்பல்கள்


(கொழும்பு)

ஜப்பான் கடல் வழி தற்பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் இலங்கை வந்துள்ளன. இரண்டு நாள் நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை நேற்றுமுன்தினம் காலை வந்தடைந்த இரு கப்பல்களையும் இலங்கை கடற்படையினர கடற்படை சம்பிரதாய முறைப்படி வரவேற்றனர்.

ஏடன் வளைகுடா மற்றும் சோமாலிய கடற்பரப்பில் சோமாலிய கடற்கொள்ளையர்களின் செயற்பாடுகளை முறியடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டு ஜப்பான் திரும்பும் வழியிலேயே இந்த இரு கப்பல்களும் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் பிரசன்ன கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

ஜப்பான் கடல் வழி தற்பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான "தகனாமி டி.டி -110", "ஓஹனாமி டிடி - 111" என்ற இரு கப்பல்களே அதன் கட்டளை அதிகாரி கப்டன் டகாகி மிஸசிமா தலைமையில் இலங்கை வந்துள்ளது.

கட்டளைத் தளபதி கொமாண்டர் சியோயிச்சி யொனேமாரு தலைமையில் வருகை தந்துள்ள "தகனாமி டிடி -11" என்ற கப்பலில் 190 கடற்படை வீரர்கள் வருகை தந்துள்ளனர்.





கட்டளைத் தளபதி கொமாண்டர ட்சுடோமு யோஷினோ தலைமையில் வருகை தந்துள்ள "ஒஹ்னாமி டிடி - 111" என்ற கப்பலிலும் 190 கடற்படை வீரர்கள் வருகை தந்துள்ளனர்.

இரு கப்பல்களும் சுமார் 151 மீற்றர் நீளத்தை உடையவை. இக் கப்பல்கள் 6.450 தொன் கொள்ளவைக் கொண்டது. இரு நாட்கள் இந்தக் கப்பல்கள் இலங்கையில் தங்கியிருக்கவுள்ளன. இரு நாட்டு கடற்படையின் நட்புறவுகளை மேலும் பலபடுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை இலங்கை கடற்படை ஏற்பாடு செய்துள்ளது.

## சனத்தொகை கணக்கெடுப்புக்கு உட்படுவதை உறுதிப்படுத்துமாறு மக்களிடம் கோரிக்கை



(கொழும்பு)

அகில இலங்கை ரீதியான சனத் தொகைக் கணக்கெடுப்பில் தாம் கணக்கெடுக்கப்படுவதை மக்கள் உறுதி செய்ய வேண்டுமென தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் மக்களிடம் கோரியுள்ளது.

சகல பிரஜைகளும் சரியான தகவல்களை வழங்குவதும். மக்கள் வழங்கிய தகவல்களை திணைக்கள ஊழியர்கள் இரகசியமாக வைத்திருப்பதும் சட்டப்படி கட்டாயமானதாகும் என திணைக்களப் பணிப்பாளர் நாயகம் டி.பீ.பி. வித்தியாரட்ன தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 21 ஆம் திகதி வரை கணக்கெடுப்பு இடம்பெறும். வீடுகளுக்கு வரும் கணக்கெடுப்பு உத்தியோகத்தர்களை அணிந்திருக்கும் தொப்பி, அவர்கள் வைத்திருக்கும் சனத்தொகை, வீடுகள் தொகை மதிப்பு இலச்சினையுடன் கூடிய கோவை என்பவற்றின் மூலம் அடையாளம் காண முடியும்.

மேற்படி உத்தியோகத்தர்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளையும் வைத்திருப்பார்கள் வசிப்பதற்கு வீடில்லாதவர்கள் மார்ச் 19 ஆம் திகதி அவர்கள் இரவில் படுத்துறங்கும் இடத்தில் வைத்து கணக்கெடுக்கப்படுவர். இவர்கள் கணக்கெடுக்கப்பட்டவர்கள் என்பதை உறுதிசெய்யும் அடையாள அட்டையொன்றும் இவர்களுக்கு வழங்கப்படும்.

தேசிய அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, மாவட்டம், கல்வித் தகைமைகள், தொழிற் பயிற்சி, தொழில்வாண்மை, கணினி அறிவு, தொழில், பொருளாதார செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் திரட்டப்படவுள்ளதால் மக்கள இவற்றை ஆயத்தமாக வைத்திருப்பது வேலையை இலகுவாக்கும்.

தேவையானோருக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவும் சனத்தொகை, வீடமைப்பு தொடர்பில் சரியான தரவுதளத்தைப் பேணவும் கணக்கெடுப்பில் பெறப்படும் தரவுகள் உதவும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புலிகளுக்குப் பயந்தே தமிழகம் வந்தேன்

### ஸ்கந்தபுரம் இளைஞன் வாக்குமூலம்

(கொழும்பு)





தமிழ்நாடு திண்டுக்கலில் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த இளைஞர் புலிகளுக்கு பயந்து தமிழகம் வந்ததாகக் கூறியுள்ளார். இலங்கை - கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த கஜன் (வயது -28) என்பவர் கடந்த 2009 ஜூலையில், ஒரு மாத விசாவில் சென்னை சென்றுள்ளார். இவர் இலங்கைக்குத் திரும்பாமல் திண்டுக்கல் நாகல்நகரில் வசித்தார். இவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தியதில் தன்னை இயக்கத்தில் சேருமாறு புலிகள் வற்புறுத்தியதாகவும், இதனால் அஞ்சி தமிழகம் வந்ததாகவும் கூறியுள்ளார்.

இதையடுத்து, திண்டுக்கல் சிறையில் இருந்த அவர், சென்னை புழல் சிறைக்கு மாற்றப்பட்டார்.

19. நந்துவின் நிறை 26 kg 500 g சுந்து, பிந்து இருவர்களினதும் நிறைகள் சமன். நந்து, சுந்து, பிந்து மூவரினதும் நிறை 82 kg 200 g எனின், பிந்துவின் நிறை என்ன?

.......................................................................................

20. பயணம் ஒன்று 7 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் வரை நடைபெற்று பி.ப.9.50 மணிக்கு நிறைவடைந்து பயணம் ஆரம்பித்த நேரத்தை எழுதுக.

.......................................................................................

21. 215.3 உடன் 34.5 இனைக் கூட்டுக. ...........................................

22. ஒரு குறிப்பிட்ட பரீட்சை விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரு பாடங்களில் மட்டும் நடைபெற்றது. 200 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 100 பேர் கணிதமும் 120 பேர் விஞ்ஞானமம் சித்தியடைந்தனர். விஞ்ஞானம் சித்தியடைந்தோர் எத்தனை பேர்?

.......................................................................................

23. ரூபா 20.00 இற்கு 25 ரொபிகள் வாங்கலாமாயின் ரூபா 80.00 இற்கு எத்தனை ரொபிகள் வாங்கலாம்?





.......................................................................................

24. ஒரு கிலோ உருளைக் கிழங்கின் விலை ரூபா 48.00 எனின், 650 கிராம் உருளைக் கிழக்கின் விலை என்ன?'

.......................................................................................

**25. பின்வரும் தாவரங்களின் பெயர்களின் பெயர்களை எழுதுக.**





(சீதேவியார் செங்கருநீர், முள்முருங்கை, முருங்கை, நன்னாரி)

1) ............................ 2) ............................ 3) ............................ 4) ............................

**26. பின்வரும் படங்களில் உள்ள பறவைகளின் பெயரைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

(சேவல், பருந்து, மரங்கொத்தி, வாத்து)

1) ............................ 2) ............................ 3) ............................ 4) ............................

27. 'கணினி' என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் அமைந்து 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.

**கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 31 கேள்விகளின் விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. 3 | 08. 2 | 15. 2 | 22. 4 | 29. 2 | 36. 2 |
| 02. 1 | 09. 2 | 16. 3 | 23. 4 | 30. 1 | 37. 2 |
| 03. 1 | 10. 2 | 17. 2 | 24. 2 | 31. 1 | 38. 1 |
| 04. 2 | 11. 2 | 18. 2 | 25. 3 | 32. 2 | 39. 2 |
| 05. 1 | 12. 3 | 19. 1 | 26. 4 | 33. 3 | 40. 2 |
| 06. 1 | 13. 1 | 20. 2 | 27. 2 | 34. 2 | |
| 07. 1 | 14. 1 | 21. 2 | 28. 2 | 35. 1 | |





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு

வெளியீடு 32



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01) கீழே தரப்பட்ட கடிதத்தை வாசிக்குக.**

இல.8B 3/2, பெரேரா லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு.
23.01.2008

வணக்கம் நான் நல்ல சுகமாக இருக்கிறேன். உனது சுகத்தை அறிய ஆவலாக உள்ளேன். உனது கடிதம் நேற்றுத்தான் கிடைத்தது. நீ கேட்டுக்கொண்டபடி அவுஸ்ரேலியா, கனடா, நோர்வே நாட்டு முத்திரைகளை அனுப்புகிறேன். உன்னிடம் பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளின் முத்திரைகள் இருந்தால் எனக்கு அனுப்பி வைக்கவும்.

நன்றி
வணக்கம்

இப்படிக்கு,
அன்பு நண்பன்,
இ.ராஜ்குமார்.

01. இக்கடிதம் யாரால் எழுதப்பட்டுள்ளது?

.......................................................................................

02. இக்கடிதத்தை எழுதியவர் வசிக்கும் முகவரியை எழுதுக.

.......................................................................................

03. இக்கடிதம் எப்போது எழுதப்பட்டது?

.......................................................................................

04. இக்கடிதத்தை எழுதியவருக்கும் மற்றையவருக்கும் இடையேயான தொடர்பு என்ன?

.......................................................................................

05. இக்கடிதம் என்ன நோக்கோடு எழுதப்பட்டுள்ளது?

.......................................................................................

**02) கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களின் பொருளைத் தரும் தமிழ்ச் சொற்களைப் பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

01. Letter:................................ 02. Stamp ................................ 03. Thanks................................

**03) சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01. பந்தியில் இருந்து இரண்டு பன்மைச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.

.......................................................................................

02. "நேற்று" என்னும் சொல்லின் நிகழ்காலச் சொல்லையும் எதிர்காலச் சொல்லையும் எழுதுக.

1. நிகழ்காலச் சொல்................................ 2. எதிர்காலச் சொல்................................

**04) பின்வரும் சிங்களச் சொற்களின் பொருள் தரும் தமிழ்ச் சொற்கள் கடிதத்தில் உண்டு. அவற்றைத் தேடியறிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. ஆயுபோவன்................................ 2. தகலுவா................................

3. ஸ்(த்)துதிய் ................................ 4. சனீப்ப................................

**கீழ்வரும் பாடலைக் கவனமாக வாசிக்குக.**

வெட்டியடிக்கும் மின்னல் - கடல்
வீரத்திரை கொண்டு விண்ணையடிக்குது
கொட்டியடிக்குது மேகம் - கூ கூவென்று
விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா

**05. கீழ்வரும் சொற்களின் ஒத்த சொல்லை பாடலில் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. ஆழி ......................................
2. திக்கு......................................
3. புனல்......................................

**06. கீழ்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச் சொல்லை பாடலில் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. மண் ......................................
2. அண்ணா......................................
3. வெயில்......................................

**07. சரியான விடையை இடைவெளியில் எழுதுக.**


01. ஆகாயம் என்னும் சொல்லின் பொருளை உணர்த்தும் மூன்று சொற்கள் பாடலில் உண்டு, அம்மூன்று சொற்களையும் எழுதுக.
......................................

02. மின்னலுடன் சேர்ந்து வருவது என்ன?
......................................

03. அசைகின்ற வளியை எவ்வாறு அழைப்பர்?
......................................

04. எட்டுத் திசைகளும் எவை?
......................................

**08. சரியான விடையை இடைவெளியில் எழுதுக.**



01. வானத்தினூடாகப் பிரயாணம் செய்பவை எவை?
......................................

02. தரையின் மீது பிரயாணம் செய்பவை எவை?
......................................


03. கடல் மீது பிரயாணம் செய்பவை எவை?
......................................

04. விசேட பாதை மீது பிரயாணம் செய்வது எது?
......................................

**09. கீழே தரப்பட்டுள்ள உயிரினங்களின் பெயர்களை எழுதுக.**

1) 
......................

2) 
......................

3) 
......................



**10. கீழேயுள்ள அட்டவணையில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

| | கணிதவுரு | நேரான விளிம்புகளின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை | முகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | (உ+ம்) கனவுரு | 12 | 8 | 6 |
| 1. | உருளை | | | |
| 2. | நான்முகி | | | |
| 3. | கோளம் | | | |
| 4. | சதுரமுகி | | | |



11. சீரான சுற்றுப்பருமன் உடைய பனை மரம் ஒன்றின் முனைகள் ஒழுங்காக இருக்கத்தக்கவாறு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு வெட்டப்பட்ட குற்றிகளுக்கு வழங்கத்தக்க கணிதப் பெயர் என்ன?
......................................

12. குமார் தனது சம்பளத்தின் 1/2 பகுதியை உணவுக்காகவும், 1/4 பகுதியை ஆடை வாங்கவும் செலவு செய்துவிட்டு மிகுதியை சேமிப்பிலிட்டான். அவனுடைய சம்பளம் ரூபா 4800 எனின் அவன் ஆடைய வாங்கச் செலவு செய்த பணம் எவ்வளவு ரூபாய்?
......................................

13. "தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது" என்னும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.
......................................


**பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

14.

| | |
|---|---|
| கமலா |  |
| விமலா |  |

கமலாவும் விமலாவும் அரையாண்டுப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் விபரத்தை வரைபு காண்பிக்கிறது. கமலா விமலாவை விட 60 புள்ளிகள் குறையப் பெற்றாள். எனின் விமலா பெற்ற புள்ளிகள் எத்தனை?
......................................

15. அருகில் தரப்பட்ட கூட்டற் பிரசினத்தில் △ இனால் ஓர் இலக்கமும் □ இனால் ஓர் இலக்கமும் காட்டப்பட்டுள்ளது எனின் △ இனாலும் □ இனாலும் குறியிடப்படும் இலக்கத்தை எழுதுக.



△ ......................... □ .........................

**பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


16. இரு எண்களைப் பெருக்கும்போது கிடைப்பது 20. அவ்விரு எண்களையும் கூட்டும்போது கிடைப்பது 9. அவ்விரு எண்களும் எவை?
......................................

17. ஒரு விருந்துபசாரத்தில் மொத்தமாக 80 பேர் பங்குபற்றினார்கள். அதில் ஆண்களின் எண்ணிக்கையை விடப் பெண்களின் எண்ணிக்கை 24 அதிகமாகும். எனவே அங்கு காணப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை யாது?
......................................

18. ஒரு செவ்வக வடிவ மைதானத்தின் நீளம் 250 மீற்றர். அகலம் 150 மீற்றர். இதன் சுற்றளவு எத்தனை மீற்றர்?
......................................

# சர்வதேச விசாரணைகளில் இருந்து அரசைக் காப்பாற்ற முன்வருகிறார் சுமந்திரன்

(மேற்படி தலைப்புடன் விடுதலைப் புலிகளின் ஆதரவு இணையத்தளத்தில் வெளிவந்திருக்கும் கட்டுரையிலிருந்து...)



**"கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்செய்வதற்காக உள்நாட்டில் இடம்பெறும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம்.**

**இவை படிப்படியாக இடம்பெறும் செயற்பாடுகள். அதற்குக் காலம் எடுக்கும். கம்போடியாவுக்கு 30 வருடங்கள் தேவைப்பட்டது"**

**- கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன்**

ஜெனீவாவில், ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளுக்கு இன்னமும் சில நாட்களே எஞ்சியுள்ள நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின், கொழும்பை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம்.ஏ.சுமந்திரன், மஹிந்த ராஜபக்ஷவின் அரசினைக் காப்பாற்றும் வகையிலான அறிக்கையொன்றை பி.பி.ஸி.யின் சிங்கள சேவைக்கு கடந்த செவ்வாயன்று வழங்கியுள்ளார்.

"கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்செய்வதற்காக உள்நாட்டில் இடம்பெறும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம். பரிந்துரைகள் செயற்படுத்தப்படாமற் போகுமிடத்திலேயே நாங்கள் சர்வதேச விசாரணைகளுக்கான கோரிக்கைகளை விடுக்க முடியும்" என்றார் சுமந்திரன்.

"இவை படிப்படியாக இடம்பெறும் செயற்பாடுகள். அதற்குக் காலம் எடுக்கும். கம்போடியாவுக்கு 30 வருடங்கள் தேவைப்பட்டது." என்றும் பிபிஸிக்குத் தெரிவித்த சுமந்திரன், இலங்கை அரசின் மீதான அமெரிக்க அரசின் அழுத்தத்தையும் வரவேற்றார்.

இதற்கிடையில் அமெரிக்காவின் மனிதஉரிமை விவகாரங்களுக்கான செயலர் மரியா ஒடேரோ கொழும்பில் பத்திரிகையாளர்களிடையே கருத்துத் தெரிவிக்கையில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அமுல்செய்வதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில இலங்கைக்கெதிரான தீர்மானத்துக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகத்தினரிடம் கூறிய கருத்துக்களை ஒத்ததாக பகிரங்கமாக அமெரிக்காவின் நிலைப்பாடு இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழர் போராட்டத்தின் அரசியல் அடிப்படைகளுக்குத் தீர்வு காணப்படாத நிலையில், TNA தலைமையிலுள்ள மாற்றுக்கருத்துக் கொண்ட சிலரும் செல்வராசா பத்மனாதனும் (கே.பி) இனப்படுகொலை புரிந்த ராஜபக்ஷவைத் தப்புவிப்பதற்காக ஒரு புள்ளியில் சந்தித்திருக்கிறார்கள். யுத்தம் நடந்த விதம் மற்றும் அதற்கு உடந்தையாயிருந்த அமெரிக்கா, இந்தியா ஆகியன செயற்பட்ட விதம் குறித்து அவர்கள் நன்றி பாராட்டுகிறார்கள். இவ்வாறு இலங்கை அரசியல் அவதானிகள் சிலர் கூறினர்.

இதேசமயம், எல்.ரி.ரி.ஈ யின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் போராளிகளின் நிலைகுறித்து வெளிப்படையாகவே பொய்யுரைத்துள்ளார், TNA தலைவர் ஆர்.சம்பந்தன். 'புனர்வாழ்வளிப்பு' நடவடிக்கைகள் திறம்பட நடைபெறுவதாக அவர் கொழும்பைப் பாராட்டியுள்ளார்.

"அதிகளவிலான இளைஞர்களும் யுவதிகளும் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர், அதனையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெறுகின்றன" என்று கடந்த புதனன்று, திரு. சம்பந்தன் டெய்லி மிரர் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

யுத்த காலத்திலும் அதன் பின்னரும் இலங்கையுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த அமெரிக்காவின் துணை ராஜாங்கச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக், மரியா ஒடேரோவுடன் கொழும்பு வந்திருந்தார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, பொறுப்புக்கூறல், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தும் வகையில், இலங்கைக்கெதிரான தீர்மானத்துக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்று பிளேக் தெரிவித்ததாக பி.ரி.ஐ செய்திஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச அரங்குகளில் முன்னர் இந்தியா, ரஷ்யா, சீனா போன்றன கொண்டிருந்த நிலைப்பாட்டுக்குச் சற்றும் குறைவில்லாததாகவே அமெரிக்காவின் இந்த முன்மொழிவுகள் உள்ளன.

அமெரிக்க, இந்திய அழுத்தங்களால், ராஜபக்ஷவின் அரசு திண்டாடுவதாக ஊடகங்களில் பிரசாரம் செய்யப்படுவது, தமிழர்களை ஏமாற்றுவதற்குச் செய்யப்படும் நாடகமே என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜெனீவாவில் ஐ.நா மனிதஉரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கெதிரான அமெரிக்காவின் உத்தேச நடவடிக்கையானது, யுத்தத்தின் போதான இனப்படுகொலைகள் பற்றியோ அல்லது, யுத்தத்தின் பின்னரான தமிழ் மக்களின் அவலங்களுக்கு நீதி பெற்றுத் தருவதோ அல்ல.

மாறாக, இத்தீவில் ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான நில அபகரிப்பு, காலனித்துவம், இராணுவமயமாக்கல், சுய நிர்ணய உரிமை மறுக்கப்படல், தங்களை அபிவிருத்தி செய்வதற்கான உரிமை மறுக்கப்படல் போன்றவற்றுடன் ஒப்பிடுகையில், 'நல்லிணக்கம்', படிப்படியான பொறுப்புக்கூறல், தனி மனித உரிமை மீறல், மற்றும் ஜனநாயகம் என்பன முன்னுரிமைக் குரிய பிரச்சினைகள் அல்ல. இவை பற்றி எந்த சர்வதேச சபை பேசப் போகின்றது?

இதற்கிடையில், தமிழ்நாட்டு சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும், ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் ஆதரவாகச் செயற்படும் தமிழக மக்களின் போராட்ட குணத்தையும் வெளிப்படையாக எதிர்க்கும் வகையில் TNA நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் அறிக்கை அமைந்திருப்பதாக இலங்கையிலுள்ள அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

விரிவான ஆய்வுகளின் அடிப்படையில் TNA முன்னதாக, கற்றுக்கொண்ட பாடங்கள்மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை நிராகரித்திருந்தது.

மஹிந்த ராஜபக்ஷவும் அவருக்கு உடந்தையாக இருந்த சக்திகளும், ஜெனீவாவில் மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே மீண்டும் ஒருமுறை வெற்றி பெற்று விட்டார்கள்.

அநீதியிழைப்போருக்கு இவ்வாறான வெற்றிகள் அடிக்கடி கிடைக்கின்றன. தமிழர் தரப்பில் சிறந்த வியூகங்கள், ஒன்றிணைந்த அரசியல் செயற்பாடுகள் என்பன இல்லாமையே இவ்வாறான வெற்றிகளுக்கான காரணங்கள் என்பது தெளிவு. அரசியல் தலைவர்களையன்றி வெறும் முகவர்களைத் தெரிவு செய்து விட்டோமே என்பது புலம்பெயர் தமிழர்களின் புலம்பல்.

# தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கெதிராக ஐக்கியப்படுங்கள்!

- வானவில் மாசி இதழ் தலையங்கம் -


**1987**ஆம் ஆண்டில் இலங்கை அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் நாற்பத்திரண்டாவது பிரிவின்படி எட்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டு, 1988ஆம் ஆண்டில் முதல்முறையாக சகல எட்டு மாகாணங்களிலும் தேர்தல்கள் நடாத்தப்பட்டு மாகாணசபைகள் அமைக்கப்பட்டன.

1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தெரிவு செய்யப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபையானது மிகக்குறுகிய காலமே செயற்பட்டு, புலிகளின் வற்புறுத்தல்களுக்கிணங்க பிரேமதாசா அரசால் 1990ஆம் ஆண்டு, யூன் மாதம் கலைக்கப்பட்டது.

அதன்பின்னர் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கென தேர்தல் எதுவும் நடாத்தப்படவில்லை. வடக்கு கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு 19 ஆண்டுகளின் பின்னர், 2006ஆம் ஆண்டில் இலங்கை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றின்படி, இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபை தனித்தனி மாகாணசபைகளாக பிரிக்கப்பட்டது.

தனியாக பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் முதல்முறையாக 2008ஆம் ஆண்டு மே மாதம் நடாத்தப்பட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர மக்கள் கூட்டமைப்பு அமோக வெற்றியை ஈட்டியது. இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் வெற்றிலை சின்னத்தின்கீழ் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளும் இலங்கை முஸ்லீம் காங்கிரசும் இணைந்து போட்டியிட்டன. தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் சார்பில் முதலமைச்சராக பதவியேற்ற சி.சந்திரகாந்தன் தலைமையிலான கிழக்கு மாகாணசபை நிர்வாகம், கிழக்கு மாகாணத்தை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதில் வெற்றி கண்டுள்ளது.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் வெற்றிகரமாக நடத்தப்பட்டதை போலவே, தனியாக பிரிக்கப்பட்ட வடக்கு மாகாணசபைக்கான தேர்தலும் விரைவில் நடத்தப்படலாமென்ற ஊகங்கள், 2009ஆம் ஆண்டு மே மாதம் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னரான காலப்பகுதியிலிருந்து நிலவி வருகின்றது.



ஆனால் புலிகளை தோற்கடித்ததை பயன்படுத்தி, ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்ற தேர்தலையும் 2009, 2010ஆம் ஆண்டில் நடாத்தி தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர மக்கள் கூட்டமைப்பு தலைமையிலான அரசு, வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் தொடர்பாக எந்த அறிவிப்பையும் இன்னமும் வெளியிடவில்லை.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) போன்றகட்சிகள் நீண்ட காலமாகவே வடக்கு மாகாணசபைக்கான நிர்வாகத்தைக் கைப்பற்றுவதற்கான தயாரிப்பில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர்.

2010ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெருவெற்றியை ஈட்டியதால், வடக்கு மாகாணசபைக்கான தேர்தலிலும் அவர்களே வெற்றி பெறுவார்கள் என்ற அபிப்பிராயம் எல்லா தரப்பினரிடையேயும் நிலவுகின்றது. இதனால் தமிழத் தேசியக் கூட்டமைப்பிடம் சோரம் போகும் மனப்பாங்கே ஈ.பி.டி.பி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளிடம் உருவாகியுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தினையாவது வடக்குக்கிழக்கில் அமுல்படுத்துமாறே காலங்கடந்து இப்போது பல முனைகளிலிருந்தும் கோரிக்கைகள் வருகின்றன. எனவே இந்த திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை நிர்வாகத்திற்கான தேர்தல் என்பது மிகவும் முக்கியமானது.

காலங்காலமாக தமிழ் பிற்போக்குச் சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் தலைமைகளின் தற்போதைய அவதாரமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் ரீதியாக தோற்கடிக்க விரும்பும் ஏனைய தமிழ்க் கட்சிகள், இந்தக் தேர்தலை சரியாக பயன் படுத்த வேண்டும்

வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தலில் கூட்டுச்சேர்வது பற்றி ஆலோசிக்காமல் இப்போதே தமது செயற்பாடுகளை ஒருமுனைப்படுத்துவது நல்லது. ஒருபோதும் தோற்கடிக்கப்பட முடியாது என்று கருதப்பட்ட புலிகளும் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பதை மனதிற் கொண்டு, தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கு எதிராக ஐக்கியப்படுங்கள். இல்லாவிடின் இந்த 'ஏனைய தமிழ் கட்சிகள்' தமிழ் பிற்போக்கு சக்திகளை தோற்கடித்து புதிய தலைமை உருவாகுவதற்கு தடையாக இருக்கிறார்கள் என்றே கருத இடமுண்டு.

# தமிழக பொலிஸார் துப்பாக்கிச் சூடு 5 கொள்ளையர் ஸ்தலத்தில் பலி



(சென்னை)

இதுவரை தமிழகத்தில் நடந்த பொலிஸ் என்கவுண்டரிலேயே மிகப் பெரியது நேற்று அதிகாலையில் சென்னை வேளச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

தமிழகத்திலே பொலிஸாரால் ஒரேநேரத்தில் 5 பேர் என்கவுண்ட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சென்னை புறநகர்களில் உள்ள இரு வங்கிகளில் ஒரு மாத இடைவெளியில் துணிகரமாகக் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் பொலிஸாரை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இதையடுத்து இந்த வழக்குகளை சவாலாக எடுத்து விசாரணையைத் தொடங்கிய பொலிஸார் அதி தீவிரமாக விசாரணை நடத்தினர்.

வரலாறு காணாத வகையில் 40 தனிப்படைகளை அமைத்து விசாரணையை முடுக்கி விட்டனர். கொள்ளை நடந்த இரு வங்கிகளிலும் கண்காணிப்புக் கமராக்கள் இல்லாத நிலையில், கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்ட வங்கிக் கிளைகளில் பதிவான காட்சிகளை ஒரு ஆதாரமாக வைத்து பரிசோதித்தபோது பொலிஸாருககு பெரும் துப்புக் கிடைத்துள்ளது.

கொள்ளையடித்த கும்பலைச் சேர்ந்த ஒருவன் அந்தக் காட்சியில் இருந்தது தெரிய வந்தது. அதை உறுதிப்படுத்திக் கொணட பொலிஸார் கொள்ளையர்கள் பதுங்கியிருந்த வீடு குறித்த' தகவலைத் திரட்டினர். இதையடுத்து கொள்ளையர்களை என்கவுண்டர் மூலம் சுட்டுத்தள்ளினர்.

தமிழகத்தில் இதுவரை இவ்வளவு பெரிய என்கவுண்டர் நடந்ததில்லை. அதிலும் சென்னையில் ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

அதேசமயம், தமிழக பொலிஸார் என்கவுண்டர் மூலம் 5 பேரை சுட்டுக் கொல்வது இது 2 ஆவது முறையாகும். இதற்கு முனபு 2002 ஆம் ஆண்டு பெங்களூரில் தமிழக பொலிஸார் இமாம் அலி உள்ளிட்ட ஐந்து பேரை என்கவுண்ட்டர் மூலம் சுட்டுக் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூவரை மணந்த பெண் யாருக்குச் சொந்தம்?

(சென்னை)

முதல் திருமணத்தை மறைத்து இராமநாதபுரத்தைச் சேர்ந்த இருவரைக் காதலித்து திருமணம் செய்த பெண், யாருக்குச் சொந்தம் எனக் கடைசி இரண்டு கணவர்களிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், பட்டுக்கோட்டை ரேணுகா (வயது -27) இவரது 14 வயதில் அதே பகுதியைச் சேர்ந்த தென்னரசு என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு இரண்டு பெண் 1 ஆண் குழந்தை உள்ளனர். தென்னரசு வேலை தேடி வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார்.

பட்டுக்கோட்டையில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த கார் டிறைவர் செந்தில்குமார் என்பவரை ரேணுகா சந்தித்தார். அப்போது முதல் திருமணத்தை மறைத்து ரேணுகா கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் செந்தில்குமாரைத் திருமணம் செய்துகொண்டார். செந்தில்குமார் மனைவியைப் பிரிந்து வாழ்ந்து வந்தவர். பின்னர் இதனையும் மறைத்து மூன்றாவது திருமணம் செய்துள்ளார்.

இராமநாதபுரம் இன்ஸ்பெக்டர் மீனாம்பாள் ரேணுகாவிடம் நடத்திய விசாரணையில் ஆடம்பரமாகவும், வசதியாகவும் வாழவே முதல் மற்றும் இரண்டாவது திருமணத்தை மறைத்து மூன்றாவது திருமணமும் செய்து கொண்டேன் எனத் தெரிவித்தார். இனி இராமநாதபுரம் பக்கமே தலைகாட்டக்கூடாது என எச்சரித்து பட்டுக்கோட்டையில் உள்ள பெற்றோரிடம் ரேணுகாவை, பொலிஸார் ஒப்படைத்தனர். இதில் ஏமாற்றமடைந்த செந்தில்மனோகரன் செந்தில்குமாருக்கு அறிவுரை கூறி அனுப்பி வைத்தனர்.

# 8 கோடி பேரைக் காப்பாற்றுமாறு ஜெயலலிதாவிடம் கோரிக்கை

(சென்னை)

கூடங்குளம் அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி. உதயகுமார் முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு எட்டுக்கோடி பேரைக் காப்பாற்றுமாறு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.




அக்கடிதத்தில் கூடங்குளம் அணுமின் நிலையம் எங்கள் பகுதி மக்களின் கருத்தைக் கேட்காமல், எந்தவிதமான உண்மைத் தகவல்களையும் தராமல், ஜனநாயக மரபுகளுககு எதிராக எங்கள் மீது திணிக்கப்பட்ட திட்டமாகும்.

எங்களுடைய போராட்டத்துககு எந்த வெளி மாநிலத்திலிருந்தோ, பன்னாட்டு, இந்திய தொண்டு நிறுவனங்களில் இருந்தோ, தனியார் நிறுவனங்களில் இருந்தோ, கட்சிகளிடமிருந்தோ பணமோ, வேறு உதவிகளோ வரவில்லை.

எங்கள் மீனவ மக்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், தொழிலாளர்கள், பீடி சுற்றும் பெண்கள் தரும் சிறிய நன்கொடைகளை வைத்து, எளிமையாக போராட்டங்களை நடத்தி வருகிறோம் என்றார்.

# கொடுத்தது பிறந்தநாள் பரிசு வருகிறது அழைப்பாணை

(சென்னை)

தமிழக முதலவர் மீதுள்ள பிறந்த நாள் பரிசு வழக்கில் இன்னும் 4 வாரங்களில் அவர், பதிலளிக்கும் விதத்தில் கடிதம் அனுப்பும் படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1992 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதல்வராக ஜெயலலிதா பதவி வகித்த போது தனது பிறந்த நாளையொட்டி வெளிநாட்டிலிருந்து 3 இலட்சம் அமெரிக்க டொலர் மதிப்புக் கொண்ட "வங்கிக் காசோலை" ஒன்றை பெற்றார்.

இந்தக் தொகை சட்ட விரோதமாக பெறப்பட்டுள்ளதாக மத்திய புலனாய்வுத் துறை கருதி, ஜெயலலிதா மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தது.

ஆனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா மனு தாக்கல் செய்தார்.

சம்பந்தப்பட்ட குற்றம் 1992 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது, ஆனால் 1996 ஆம் ஆண்டில் தான் வருமான வரித்துறையின் கவனத்துக்கு வந்தது.

எனவேதான் வழக்கு விசாரணையில் தாமதம் ஏற்பட்டது. மேலும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐக்கிய அரபு நாடுகளில் விசாரணை நடத்த வேண்டி ஏற்பட்டதாலும் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில். வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு செல்லாது என அறிவிக்க வேண்டும் என்று மனுவில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.




# ராஜீவ் கொலை விவகாரம் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(புதுடில்லி)


ராஜீவ் கொலையாளிகள் 3 பேருக்கு மரண தண்டனை வழங்கும் விவகாரத்தில், சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கு விசாரணையை வேறு நீதிமன்றங்களுக்கோ அல்லது உச்ச நீதிமன்றத்துக்கோ மாற்றி உத்தரவிடக்கோரி தாக்கல் செய்த மனு மீது விசாரணை நடத்திய உச்ச நீதிமன்ற நீதிபதி, இந்த வழக்கு விசாரணையை மார்ச் 1 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த நீதிபதி, முதலில் நிலுவையில் உள்ள கருணை மனுக்கள் குறித்த விவரங்கள் உச்ச நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டும். அதன்பின்னர், மனுதாரரின் மனு மீது விசாரணையை வைத்துக் கொள்ளலாம் என்று கூறினார்.

முன்னதாக, உச்ச நீதிமன்றத்தில் ஜி.கே.மூப்பனார் பேரவை அமைப்பு சார்பில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த அமைப்பின் எல்.கே.வெங்கட் என்பவர் இது தொடர்பான ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அதில், ராஜீவ்காந்தி படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை முடிந்து நளினி, ஸ்ரீஹரன் என்ற முருகன், டி.சுந்தரராஜா என்ற சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களில் நளினியின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. மற்ற அனைவரின் மரண தண்டனையும் உறுதி செய்யப்பட்டது.

## தவக்காலச் சிந்தனை



தவக்காலம் ஒரு தனிக்காலம் அது ஒரு உளமாற்றத்தின் காலம். இது செபக்காலம், எம்மை நாமே ஆழ்மனதில் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்க்கும் காலம். நாம் இறைவனோடு ஒன்றித்துப் புதுவாழ்வைத் தொடக்கி வைக்கும் காலம்! இயேசுவின் உயிர்ப்புக்கு எம்மைத் தயார்படுத்தும் காலம்! இயேசுவோடு ஒன்றிணைய இந்தக் காலத்தைப் பயன்படுத்துவோம். இன்று இயேசு எமக்கு விடுக்கும் அறைகூவல் **"காலம் நிறைவேறி விட்டது, இறையாட்சி நெருங்கி வந்து விட்டது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்"** (மாற். 1:15) என்பதே.

காலம் உருண்டோடி விடும். எனினும் இறைவனோடு கொள்ளும் உறவில் உறுதிபெறவும், நிலைத்திருக்கவும் இக்காலத்தைப் பயன்படுத்துவோம். அதன் விளைவாக நம்மையே சரிசெய்து கொண்டு உறவில் பிறரோடு கொண்டுள்ள குறிப்பாகப் போர் அனர்த்தங்களினால் நலிவடைந்து போயுள்ள எமது சகோதர உறவினர்கள் மத்தியில் இயேசுவைச் சந்திக்க இந்தக் காலத்தைப் செயற்படுத்துவோம். **"ஒவ்வொரு மனிதனும் என் நண்பன், ஒவ்வொரு மனிதனும் சகோதரன், காரணம் அவனும் மனிதன்"** எனச் சிந்தித்து எமக்குள்ளவற்றை பிறரோடு பகிர்ந்து, மனிதனை மனிதனாக மதித்துச் செயற்படுவதற்கு ஏற்ற மனநிலை உருவாக, இறையருள் எமக்கு கிடைக்க பக்தியுடன் புனித நாளான இன்று இயேசுவுடன் சேர்ந்து பாடுகளின் பாதையில் பயணிப்போம்.

**அருட்தந்தை அன்ரன் அமலதாஸ் - கிளிநொச்சி**

# பத்மநாபாசாமி கோவில் பொக்கிஷம் மதிப்பிடும் பணி மீண்டும் தொடர்கிறது

(திருவனந்தபுரம்)


திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் பாதாள ரகசிய அறைகள் திறக்கப்பட்டு அங்கிருக்கும் பொக்கிஷங்களை மதிப்பிடும் பணி இடம் பெற்று வருகிறது.

தேசிய அருங்காட்சியக பாதுகாப்பு தலைவர் வேலாயுத நாயர் தலைமையிலான மதிப்பீட்டு குழுவினர் பொக்கிஷங்களை கணக்கெடுத்து வருகிறார்கள். கடந்த 20 ஆம் திகதி தொடங்கிய மதிப்பீட்டுப் பணி தொடர்ந்து இடம்பெற்றது.

எப் நிலவறை மட்டும் திறக்கப்பட்டு ஆபரணங்கள் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன. அங்குள்ள நரசிங்கமூர்த்தி சுவாமியின் பூஜைப் பொருட்கள், வெள்ளிக் குடங்கள், தூபப் பெட்டிக்கள், நீராஞ்சன் தட்டுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

தொடர்ந்து அதே அறையில் இருந்த பொற் கவசங்கள் மற்றும் தங்க அங்கிகள், சுவாமியின் முகக் கவசம் உட்பட பெரிய அளவிலான வெள்ளிக் குடங்கள் ஆகிவயற்றை மதிப்பீட்டுக் குழுவினர் சரி பார்த்தனர்.

அப்போது மிகவும் பழமை வாய்நத அந்தப் பொக்கிஷங்களில் பழங்கால தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துகள் குறித்து தொல்பொருள் ஆய்வுக் குழுவினருடன் கலந்து ஆலோசித்தனர்.



அதன் பினபு அதனைத் தீவரமாக படித்து 4 கணினிகளில் பதிவு செய்தனர. இதனைக் கண்காணிக்க சப்-இன்ஸ்பெக்டர் அந்தஸ்தில் ஒரு வரும் நியமிக்கப்பட்டிருந்தார்.

# அமெரிக்க இராணுவத் தளம் முன்பாக ஆப்கானிஸ்தானில் மக்கள் போராட்டம்



(பாகிஸ்தான்) ஆப்கானிஸ்தானில் குர்ஆன் எரித்ததாக அமெரிக்க இராணுவத்தளம் முன்பு பொது மக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன. அவற்றில் காபூல் அருகேயுள்ள பக்ராம் என்ற இடத்தில் அமெரிக்காவின் விமானப்படைத்தள முள்ளது.

இங்குள்ள குப்பைத் தொட்டியில் முஸ்லிம்களின் புனித நூலான திருக்குர்ஆன் புத்தகங்கள் எரிந்த நிலையில் கிடந்ததாக செய்தி வெளியாகின. இது மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதனால் ஆத்திரமடைந்த சுமார் 2 ஆயிரம் பேர் பக்ராம் விமானப் படைத்தளம் முன்பு திரண்டனர். அங்கு அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

மேலும் விமானப் படைத்தளம் மீது பெற்ரோல் குண்டுகளையும் கற்களையும் வீசி தாக்கினார்கள். இதனால் அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. அவர்களால் போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே இறப்பர் குண்டுகளால் தாக்கப்பட்டனர்.

அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர்கள் வானில் பறந்து நெருப்பு மழை பொழிந்தன. இருந்தும் ஏராளமானவர்கள் விமானப் படைத்தளத்தின் வாசல்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

பின்னர் இராணுவ அதிகாரிகள் போராட்டக் காரர்களுடன் சமரசப் பேச்சு நடத்தி அமைதிப்படுத்தினர்.




## ஆர்ஜென்ரீனாவில் ரயில் விபத்து 49 பேர் பலி; 50 பேர் காயம்



(பியூனஸ்)

அர்ஜென்ரீனாவிலுள்ள ரயில்நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் 49 பேர் பலியாகியுள்ளனர். 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஆர்ஜென்ரீனாவின் தலைநகர் பியூனஸ் ஏர்ஸ் ரயில்நிலையத்தில் பயணிகள் ரயில் ஒன்று ரயில்நிலையத்திற்குள் வந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக தண்டவாளத்தின் கடைசிப் பகுதியில் உள்ள தடுப்புப்பகுதியில் பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தினால் பல ரயில்பெட்டிகள் சேதமடைந்தன காயமடைந்தவர்களை மீட்புப் படையினர் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட மோசமான ரயில் விபத்து இது என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 1970 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி இதே ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த ரயில்மீது மற்றொரு ரயில் மோதியதில் 200 பேர் பலியாகினர். பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 13 ஆம் திகதி ஏற்பட்ட ரயில் விபத்தில 11 பேர் பலியாயினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தலை துண்டித்து படுகொலை

(பாகிஸ்தான்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் அரசுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஹேமந்த் மாகாணத்தில் அரசுக்கு ஆதரவாக தகவல்கள் திரட்டி தர உளவு பார்த்ததாகக் குற்றஞ் சாட்டி 4 பேரை அவர்கள் தலையைத் துண்டித்து படுகொலை செய்துள்ளனர். இவர்கள் அனைவரும் செயற்கைக்கோளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு தகவல்களை பரிமாறக்கூடிய கைபேசிகள் வைத்திருந்ததால், உளவாளிகள் என்ற சந்தேகத்தில் 4 பேரும் கொலை செய்யப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கிலானிக்கு எதிரான ஆவணங்கள் நீதிமன்றில் சமர்ப்பிப்பு



பாகிஸ்தான் பிரதமர் கிலானி மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு அந்நாட்டு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி மீதான ஊழல் வழக்குகளை மீண்டும் விசாரிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் இந்த உத்தரவை பிரதமர் கிலானி செயற்படுத்த வில்லை.

எனவே நீதிமன்றத்தை அவமதித்ததாக கிலானி மீது குற்றம் சுமத்தப்பட்டது. இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கவேண்டும் எனக் கோரிய கிலானியின் மனுவை உயர்நீதிமன்றம் நிரா கரித்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் நடந்த விசாரணையில் கிலானிக்கு எதிரான ஆதாரங் களை அரசுத் தரப்பு சட்டத்தரணியான அன்வர் உல் ஹக் சமர்ப்பித்தார்.

இந்நிலையில் இந்த வழக்கை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது நீதிமன்றம்.

# பெனாசிர் கொலையில் தொடர்பில்லை முஷாரப் திட்டவட்டமாக மறுப்பு

(லண்டன்)

பெனாசிர் கொலையில் தனக்கு தொடர்பில்லை என முஷாரப் திட்டவட்டமாக மறுத்துள்ளார். கடந்த 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

அப்போது, அதிபராக இருந்த முஷாரப் போதிய பாதுகாப்பு கொடுக்காததால்தான் இந்தக் கொலை நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பெனாசிர் கொலை வழக்கில் முஷரப்பும் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார். தற்போது அவர் லண்டனில் தங்கியுள்ளார். எனவே, வழக்கு விசாரணையின் போது நீதிமன்றில் நேரில் ஆஜராகாததால் அவருக்கு பிடியாணை பிறப்பிககப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிந்து மாகாண சட்டசபை கூட்டத்தில் பேசிய உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், பெனாசிர் கொலையில் முஷாரப்புக்கு பங்கு இருப்பதாகத்தெரிவித்தார். மேலும், அவரை கைது செய்ய இண்டர்போல் உதவியை நாட இருப்பதாகவும் அறிவித்தார்.



இதையடுத்து முஷாரப் தெரிவிக்கையில், பெனாசிர் கொலைக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அரசியல் தலைவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது மாகாண அரசுகளின் கடமையே தவிர மத்திய அரசு பொறுப்பு அல்ல. மேலும், பெனாசிரின் பாதுகாப்பை அவரது பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தொண்டர்கள்தான் ஏற்றிருந்தனர்.

கடந்த 2007 ஆம் ஆண்டு லண்டனிலிருந்து பாகிஸ்தான் திரும்பும் போது பெனாசிரின் உயிருக்கு தீவிரவாதிகளால் ஆபத்து இருந்தது. எனவே, அவர் நாடு திரும்ப வேண்டாம் என நான் எச்சரித்தேன். ஆனால் அதை பெனாசிர் காது கொடுத்துக்கேட்கவில்லை. பெனாசிரை கொன்றது யார் என அவரது கணவரும், தற்போதைய அதிபருமான ஆசிப் அலி சர்தாரிக்கு நன்றாகவே தெரியும் என்றார்.

# பதிவிருக்கப் பெட்டகம்

சூரிய மன உணர்வுள்ளவன் வாழ்வில் வெகுவாக எதிர்வினை கொள்கிறான். அவனுக்குச் சொற்களின் கலை தெரிந்திருந்தால் அது கவிதையாகிறது, கதையாகிறது.

**– விக்ரமாதித்யன்**

இன்றைய கவிஞன் எல்லோருக்குள்ளும் தன்னையே கண்டுபிடிக்கிறான். **– சீதாகாந்த் மகாபத்ரா**

கவிஞனுக்கு எழுதுவது என்பது, தன் முன் உள்ள சுவர் போன்ற ஒன்றை உடைத்து வெகுகாலமாக அதனுள்ளிருந்த ஒன்றை வெளிச்சமாக்கி விடுவது போலத்தான். எனவேதான் கவிதை முதலில் மின்னலாக, ஒளியாக நம்மைத் தாக்குகிறது. **– ஹைடெக்கர்**

கவிஞன் கவிதையை உண்டாக்குவதில்லை. கவிதை எங்கோ பின்னால் காலங்காலமாக இருந்துவருகிறது. கவிஞன அதைக் கண்டுபிழத்துவிடுகிறான். **– ஜான் ஸ்கஸெல்**

எனக்குள் உள்ள பொருளிலிருந்தே பிறர் கவிதையை நான் கண்டாக வேண்டும். **– ஞானி**

எந்த முத்தம் பதில் முத்தத்துக்கு உத்தரவாதம் தரக்கூடியதோ அதற்குத்தான் முத்தம் என்று பெயர். அதுபோலத்தான் எந்தக் கவிதை பதிலுக்கு இன்னொரு கவிதையை வாசகனிடமிருந்து உறுதிப்படுத்திக் கொள்கிறதோ அதுதான் கவிதை.

**– க.பஞ்சாங்கம்**

கவிஞன் என்றில்லை. எந்த ஒரு கலைவடிவத்துடனும் உறவு கொள்ளும் படைப்பாளியும் இரண்டுவிதமாகச் செயல்படுகிறான். தான் அறியக் கிடைத்த ஒன்றைப் பதிவு செய்யும் களமாக, தன் கலைமுயற்சிகளைப் பயன்படுத்துகிறான். அல்லது சதா தன்னைத் துரத்திக் கொண்டிருக்கும் கேள்விகளுக்கான பதிலைத் தேடுவதற்கான உபாயமாக, கலையைப் பயன்படுத்துகிறான். வாசகன் தனக்கான அசல் கேள்விகளை கைவசம் வைத்திருந்தால், அவற்றைப் படைப்பின் மீது பிரயோகித்துப் பார்த்துக் கொள்ளலாம். **– சுந்தர ராமசாமி**

கவிஞர்கள்தான் இந்த உலகிற்கு வாழ்வதன் நியதிகளை வழங்குகிறார்கள். **– ஷெல்லி**

கவிதை என்பது மொழியைப் பற்றிய மொழியாக இருக்கிறது. **– வில்லியம் மீக்லி**

கவிதை வேண்டுமானால், சொற்களைக் கூராக்கு. இசையை ஒதுக்கிவிடு. உருவகங்களை உயிராக்கு. சிந்தனைகளை நேராக்கு. **– க.நா.சு**

சங்கப் பாடல்களைப் பயின்றால்தான் கவிதை எழுதமுடியும் என்றில்லை. சங்கம் பயின்றால் சில கவிதைகளை எழுதாமல் இருக்க முடியும். **– சுஜாதா**

ஒருதரம் செய்யப்பட்டதை மறுபடி செய்யாதிருப்பதுதான் கவிஞனின் பிரதம முயற்சி. **– எஸ்ரா பவுண்ட்**

மனிதனை மேலெடுத்துச் செல்லும் உணர்வுகளை உருவாக்குவதே கவிதையின் லட்சியம். **– சுந்தர ராமசாமி**

கவிதை மக்களைச் சேரவில்லை என்றால் மட்டுமே வருத்தப்படுவேனே தவிர, அது கவிதையாக இல்லை என்பதற்காக வருத்தப்பட மாட்டேன். **– இன்குலாப்**

ஜனங்களின் வாழ்வைச் சொல்லாத வரை ஜனங்களும் நமது கவிதையை ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள்தாம்.

**– விக்ரமாதித்யன்**

கவிதை ஒரு கம்பசூத்திரம் அல்ல. மனிதராகவும் பிறரை மனிதராக்கவும் வாழ்கிற யாருக்கும் படைப்புநிலை கிட்டும்.

**– ராஜ்கௌதமன்**

ஞானாசிரியர்கள் கவிதை எழுதுவதும், நல்ல கவிதைத் தேடலும் ஒருபுறமிருக்க, எல்லா மனிதர்களும் மனுஷிகளும் கவிதை எழுதுகிற காலமே உலகத்தின் உன்னத காலமாக இருக்கப் போகிறது. மானுடம் கருத்தாலும் கரத்தாலும் உருவாக்கும் எல்லாப் பொருள்களும் எல்லோருக்கும் கிடைத்த பின் மனசின் தேவைக்காக எல்லோரும் கவிதை படைப்பார்கள். **– கந்தர்வன்**

கவிதைக்குள் பிரச்சாரம் கூடாது என்பதைவிடவும் வலுவான பிரச்சாரம் ஒன்று இருக்க முடியுமா? **– ஆதவன் தீட்சண்யா**

# மாலைதீவு மக்களைப் பாதுகாக்க இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது



(கொழும்பு)

மாலைதீவு மக்களின் பாதுகாப்புக்காகவும் நலனுக்காகவும் இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளதுடன் நாடு என்ற வகையில் மாலைதீவு சகலதுறைகளிலும் ஸ்திரமான நாடாக தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே இலங்கை இருக்கிறது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாலைதீவிலிருந்து இலங்கைக்கு வருகைதந்துள்ள விசேட பிரதிநிதி மொஹமட் வஹிது தீனை ஜனாதிபதி நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக பதவி யேற்றுள்ள கலாநிதி மொஹமட் வஹீட்டின் விசேட தூதுவராக இலங்கை வந்துள்ள இவர் மாலைதீவு ஜனாதிபதியின் விசேட செய்தியொன் றையும் ஜனாதிபதியிடம் கையளித்தார். மாலைதீவு ஜனாதிபதியின் விசேட தூதுவராக இலங்கை வந்துள்ள மொஹ மட்வஹிதுதீன் விரைவில் மாலைதீவின் உப ஜனாதிபதியாக நியமிக்கப்படவுள்ளார். இச் சந்திப்பின் போது ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பயிற்சி வினாத்தாள் தயாரிக்கும் செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் நாளை சனிக்கிழமை பருத்தித்துறை, மருதங்கேணி கோட்ட பாடசாலை மாணவர்களுக்கும் நாளை மறுதினம் கரவெட்டி மருதங்கேணி மீள் குடியேறிய பிரதேச பாடசாலை மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளது. என வடமராட்சி கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ. குட்டித்தம்பி அறிவித்துள்ளார். (109)

# வீதிப்பாதுகாப்புத் தொடர்பில் பொதுக்கொள்கை வேண்டும்



(கொழும்பு)

வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் அனைத்து மாகாண சபைகளிலும் கொள்கையொன்றை வகுக்க வேண்டும் என சிரேஷ்ட அமைச்சர் பி.தயாரத்ன குறிப்பிட்டார்.

அதிகரித்துச் செல்லும் வாகன விபத்து தொடர்பிலான விடயங்களை ஆராய்வதற்காக நேற்று முன்தினம்கூடிய நாடாளுமன்ற விசேட செயற்குழுக் கூட்டத்தின் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இந்தக் கூட்டம் நாடாளுமன்றச் செயற்குழுத் தலைவர் அமைச்சர் பி.தயாரத்ன தலைமையில் நடைபெற்றது.

இந்தச்சந்தர்ப்பத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

பாதசாரிகளுக்காக வீதிகளில் வழிப்பாதை ஒதுக்கப்படாமை, பாதுகாப்பற்ற விதத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்துதல் போன்ற விடயங்கள் வாகன விபத்துக்களின் அதிகரிப்பிற்குக் காரணமாக அமைந்துள்ளது என இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

# சந்தேகத்திற்கிடமாக நடமாடிய குற்றச்சாட்டில் கைதான நான்கு பெண்களும் விடுதலை

(மன்னார்)

மகாசிவராத்திரி தினத்தன்று மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்தினுள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 4 பெண்களும் விசாரணையின் பின் மன்னார் மாவட்ட மேலதிக நீதவானினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரினால் ஆஜர்படுத்தப்பட்ட இந்த 4 பெண்களிடமும் விசாரணை மேற்கொண்ட மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் ஏ.யூட்சன், அவர்களை விடுதலை செய்தார்.

திங்கட்கிழமை இரவு சிவராத்திரி விரத பூஜை வழிபாடுகள் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் இந்த 4 பெண்களும் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மன்னார் குற்றப்புலனாய்வு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.இந்த 4 பெண்களும் திருகோணமலையைச் சேர்ந்தவர் கள் என மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளர்.

# மின் பாவனையாளர்களுக்கு இலகு கடனில் சி.எப்.எல். பல்புகள்

(கொழும்பு)

மின். பாவனையாள ருக்கு இலகு கட னில் சீ.எப்.எல் பல்புகள் வழங் கப்படவுள்ளன. யாழ்ப்பாணத்திற்கு முழுமையாக அனல் மின்நிலையத்தின் மூலமே மின்சாரம் விநி யோகிக்கப்படுகிறது. எரிபொருள் விலை யேற்றத்தினால் யாழ்ப்பாணப் பகுதி மக்களுக்கு மின்விநியோகத்தை அளிப்பதற் காக இலங்கை மின்சார சபை பெருமளவு பணத்தை செலவிட இருக்கிறது.

எனினும் வடபகுதியும், பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைய வேண்டுமென்ற ஜனா திபதியின் விருப்பத்திற்கு அமைய யாழ்ப்பாணத்திற்கு தங்கு தடையின்றி மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்கிறோமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.யாழ்ப்பாணத்தின் மின் விநியோகம் இப்போது 20 சதவீதம் அதிகரித்திருக்கின்றது அனல் மின்சாரப் பாவனையை குறைக்கும் எண்ணத்துடன் இலங்கை மின்சார சபை சீ.எப்.எல். பல்புகளை யாழ்ப்பாண மக்களுக்கு அறிமுகம் செய்யவிருக்கிறது பல்வேறு தரங்களைக் கொண்ட சீ.எப்.எல். பல்புகள் 200 ரூபா முதல் 400 ரூபா வரை விற்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்து மக்களுக்கு இந்தளவு அதிகரித்த விலையுடைய சீ.எப்.எல். பல்புகளை இலகுவில் வாங்குவதற்கு உதவுமுகமாக மின்சார சபை அவற்றை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுத்து, அவர்களின் மின்சாரக் கட்டணத்தில் மாதா மாதம் ஒரு பகுதியை பல்புகளுக்காக செலுத்திவிடுமாறு கேட்டுக் கொள்ளுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. மனித உரிமைப்பேரவை பக்கச்சார்பாக செயற்படக் கூடாது

## – வலியுறுத்துகிறது அரசாங்கம்



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை பக்கச்சாரபாக செயற்படக் கூடாது என அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

உறுப்பு நாடுகளை உதாசீனம் செய்யும் போக்கை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை கைவிட வேண்டுமென அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரி மைப் பேரவை அமர் வுகளின் போது இந்த விவகாரம் குறித்து கேள்வி எழுப்பப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் ஜெனீவா கிளைக்கான இலங்கைப் பிரதிநிதிதமரா குணநாயகம் இது தொடர்பில் கேள்வி எழுப்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் காரணங்களுக்காக உறுப்பு நாடுகளை உதாசீனம் செய்யும் நடைமுறை கைவிடப்பட வேண்டுமென பல உறுப்பு நாடுகள் விரும்புவதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# ச.தொ.ச நிலையங்களால் 78 மில்லியன் ரூபா இலாபம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள லக் ச.தொ.ச. விற்பனை நிலையங்கள் மூலம் கடந்த 2011 ஆம் ஆண்டில் 78 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டப்பட்டதாக கூட்டுறவு மற்றும் உள்துறை வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வாய்மூல பதிலுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சீ.வி. கருணா நயக்க கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

லக்.ச.தொ.ச.வை சிறந்த முறையில் இயங்கச்செய்து பாவனையாளர்களுக்கு முறையான சேவையை வழங்க 1600 கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதனை மேலும் இலாபமீட்டும் நிறுவனமாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள் ளவும் உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மணற்காடு மக்களுக்கு ஒருமாதத்தினுள் மின்சாரம்

(கொழும்பு)

ஒரு மாத காலத்தினுள் யாழ்.வடமராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மணற் காடு குடியிருப்பாளர்களுக்கு மின்சார வசதி பெற்றுக் கொடுக்கப்படும் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ் வரின் வாய்மூல கேள்வியொன்றுக்குப் பதி லளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரி வித்தார். அண்மையில் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக குறிப்பிட்ட பிரதேசத்துக்கு மின்சார விநியோகம் மேற்கொள் வதற்கான ஏற்பாடுகள் சற்றுத் தாமதமடைந்தன.

தற்போது அந்த வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் 953 பேர் வடக்கில் விரைவில் நியமனம்

(கொழும்பு)

வட மாகாணததில் நிலவும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வாய்மூலமான பதிலுக்காக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக் கும்போதே பிரதி அமைச்சர் நேற்று முன்தினம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன் முதல் கட்டமாக 953 குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களுக்கான பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மொழி மூலம் கடமையாற்றக் கூடியவர்களே இந்த சேவையில் அமர்த்தப்படவுள்ளனர்.

வடமாகாணத்தில் 508 சுகாதார சேவைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இவற்றில் நிலவும் வெற்றிடங்களை கூடிய விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# போலி உறுதிப்பத்திரங்கள் மூலம் அரசாங்கக் காணிகள் விற்பனை

(கொழும்பு)

போலி காணிஉறுதிப் பத்திரங்களைத் தயாரித்து அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளை விற்கும் நடவடிக்கை குறித்து தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

முதற்தர வர்த்தகர்கள் குழுவொன்று இந்த சட்டவிரோத நடவடிக்கையின் பின்னணியில் செயற்படுவதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கக் காணிகளுக்காக தயாரிக்கப்பட்ட போலி காணி உறுதிப்பத்திரங்கள் இந்தக் குழுவினரால் பயன்படுத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவரும் சட்டத்தரணியுமான நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விரிவான விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இந்த சட்டவிரோத நடவடிக்கையுடன் தொடர்புடைய சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். வர்த்தக நடவடிக்கைகள் உட்பட பல்வேறு காரணங்களுக்காக இந்தக் காணிகள் போலி உறுதிப் பத்திரங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கக்காணிகளை இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கையாள்கின்றவர்கள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதுடன் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் .தலைவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதிக்கு எதிரான சதி வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோதபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகிய மூவரையும் கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டியதாக தொடரப்பட்டுள்ள வழக்கில் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் இவ் வழக்கு மேல் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரி தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தையடுத்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு தை மாதம முதலாம் திகதிக்கும் கார்த்திகை மாதம் முதலாம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலர், முன்னாள் இராணுவத் தளபதி ஆகிய மூவருக்கும் மரணத்தை ஏற்படுத்தும் விதத்தில் சதித்திட்டம் தீட்டியதாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மூன்று தனித்தனிக் குற்றச்சாட்டுக்கள் இரண்டு எதிரிகள் மீதும் தொடுக்கப்பட்டுள்ளன.

கனகரத்தினம் ஆதித்தன், கந்தவனம் கோகுலநாத் ஆகிய இரண்டு இளைஞர்களே இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களாவர். நேற்று இவ்வழக்கு மேல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்குத் தொடுனர சார்பில் அரச சட்டவாதி றியாஸ் பாறி ஆஜரானார். முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும், இரண்டாம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஏ.கே. சந்திரகாந்தவும் ஆஜரானார்கள்.

இவ்வழக்கில் முதலாம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்த பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காலிங்க ஜெயசிங்க, இரண்டாம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்த கல்கிசை மேலதிக நீதவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதவான் துஷிரவெலியந்த மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையைச் சேர்ந்த சட்ட வைத்திய அதிகாரி டி.ஐ.எல்.ரட்ணாயக்கா உட்பட பதின்மூன்று பேர் சாட்சிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. முதலாம் எதிரி கனகரத்தினம் ஆதித்தன் முன்னாள் வண்ணி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.(137)

# கொக்கிளாய் ஆற்றில் முறைதவறிய மீன்பிடி

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் ஆற்றில் திருகோணமலை புல்மோட்டை மீனவர்களால் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெறுவதால் மீன் வளம் பாதிக்கப்படுவ தாகக் கொக்கிளாய்ப் பிரதேச மீனவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 1887 ஆம் ஆண்டு அரச வர்த்த மானியின் பிரகாரம் இவ் ஆற்றில் வீச்சுவலை, விடுவலை தவிர்ந்த ஏனைய வலைகள் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டதுடன் வரையறுக்கப்பட்ட இடத்தில் வீச்சுவலை மற்றும் விடுவலை மாத்திரம் பயன்படுத்தி மீன் பிடிக்கமுடியும். இவ் வலைகளுக்கான அளவுகள் (வீச்சு வலை அரை அங்குலத்திற் குக் குறையாமல்), விடுவலை இரண்டு அங்குலத்திற்குக் குறையாமல்) மற்றும் 22 அடிக்கு மேல் இயந்திர வள்ளங்கலால் மீன் பிடிப்பதற்கு தடை போன்ற சில விதிமுறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டு பின்பற்றப்படுகிறது.

இந்த நிலையில் புல்மோட்டை மீனவர்கள் மோட்டர் இயந்திரத்தினைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதுடன் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்தியும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதால் மீன்வளம் பாதிக்கப்படுவதுடன் கொக்கிளாய் மீனவர்களும் மீன்பிடிக்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு புல்மோட்டை மீனவர்களின் செயற்பாடுகள் குறித்து பல தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்ட நிலையில் இவர்கள் அச்சமின்றித் தொடர்ந்தும் இச் செயற்பாட்டில் ஈடுபட்டுவருவதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (04)

# கரணவாய் நெல்லியடி வீதி 9 இலட்சம் ரூபாவில் புனரமைப்பு

(வடமராட்சி)

வடமராட்சியில் கரணவாய் நெல்லியடி வீதி சுமார் 9 இலட்சம் ரூபா செலவில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

அதேவேளை வடமராட்சியில் மந்திகை தம்பசிட்டி வீதி, உடுப்பிட்டி மாலுசந்தி வீதி, என்பன பெரும் குண்டும் குழியுமாக இருப்பதால் வாகன விபத்துக்கள் ஏற்படும் நிலை காணப்படுகிறது.

இந்த குறித்த வீதியூடாக வாகனங்கள் செல்லமுடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி வீதிகளைத் திருத்த உடன் நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.(100)

# 100 சமுர்த்திப் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கல்




(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட சமுர்த்தி நிவாரணம் பெறும் 100 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச சபை சமுர்த்தி தலைமை அதிகாரி சந்திரகாசன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது. நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் எதிர்கட்சித் தலைவருமான இரவீந்திதர தாசன் பயனாளிகளுக்குத் தையல் இயந்திரங்களை வழங்கி வைத்தார்.

இத்துடன் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதற்காக 50 பேருக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் சுரேந்திரநாதன், யாழ். செயலக சமுர்த்தி அதிகார சபை ஒருங்கிணைப்பு இணைப்பாளர் இரகுநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஊதியத்தை...

வரும் பல ஆர்ப்பாட்டங்களின் பகுதியாகவே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தேசிய தொழிற்சங்க நிலையத்தின் ஏற்பாட்டாளரான சமந்த கோறளராச்சி, அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 10,000 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை 40 சதவீதத்தால் உயர்த்தவேண்டும் எனவும் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பல்கலைக் கழகங்கள்...

சம்பள அதிகரிப்பு, ஓய்வூதியம், 25 ஆம் திகதி மேலதிக படி என்பனவே கோரிக்கைகள் என தொழிற் சங்கங்களின் கூட்டு கமிட்டி தெரிவித்தது. இந்த வேலை நிறுத்தத்துக்கு பல்கலைக்கழகங்கள் ஆசிரி யர் சங்கங்கள் ஆதரவு தெரிவிப்பதாக சம்மேளனத்தின் பேச்சாளர் கலாநிதி மஹிம் மெண்டிஸ் கூறினார். எமது சக ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போது நாம் வேலை செய்வது தார்மீக பண்பாகாது என மெண்டிஸ் கூறினார்.

## யாழ். முருங்கைக்காய்...

முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் தெரிவித்தார். அத்துடன், யாழில் 30 வருட காலம் நிலவிய யுத்த சூழ்நிலையால் குறைவாகக் காணப்பட்ட பால் உற்பத்தி தற்போது பல மடங்காக அதிகரித்திருப்பதால், நெஸ்ரமோல்ட் கம்பனி மட்டும் நாளொன்றுக்கு 3000 லீற்றர் பாலை கொள்வனவுசெய்து செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார். ஐரோப்பிய நாடுகளிலுள்ள மக்கள் மத்தியில் பனை சார்ந்த உற்பத்திகளுக்கும் எப்பொழும் பெரும் வரவேற்பு காணப்படுவதாகக் குறிப்பிட்ட இலங்கை மத்திய வங்கியின் வடமாகாணக் கிளை முகாமையாளர் எஸ்.கௌரீ சங்கர், யாழ்.மாவட்டத்தில் காணப்படும் பனை வளத்தைப் பயன்படுத்தி பலவகையான கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை உருவாக்கி அதன்மூலம் அதிக இலாபம் ஈட்டிக்கொள்ள முடியும். இவற்றை உற்பத்தி செய்வதற்கு எவராவது முன்வரும் பட்சத்தில் அவர்களது உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

## முருகண்டியில்...

இதனைத் தொடர்ந்து முறிகண்டிப் பிள்ளையார் கோயில் பிரதேசத தில் ஏ.ரி.எம் இயந்திரம் ஒன்றை அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண அலுவலகம் தெரிவித்துள்ளது.

## ஜெனிவா கூட்டத்திற்கு...

அரசியல் பேச்சுக்கள் தான் இதனால் பாதிப்புக்குள்ளாகும். அதுமட்டுமன்றி இனப பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் கடும் பாதிப்பை அது தோற்றுவிக்கும் என்றும் இதனால் இந்த முயற்சியை நாம் கைவிட்டு உள்நாட்டில் எம்மால் மேற்கொள்ளக் கூடிய சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதே உசிதமானது என்று திரு சம்பந்தன் கருத்துவெளியிட்டார்.

இக்கருத்துக்களுக்கு சுமத்திரன் தனது ஆதரவைத் தெரிவித்தார். அரசுக்கு எதிராக நாம் ஜெனிவாவில் பிரச்சாரம் மேற்கொண்டால் அது சிங்கள மக்கள் மத்தியில் தேவையற்ற வெறுப்புணர்வை சம்பாதிப்பதற்கு வழிவகுக்கும் என்றும் அதனால் தமிழர் தரப்புக்கே பாதிப்பு அதிகமாகும் என்றும் சுமந்திரன் கருத்து வெளியிட்டார். இறுதியில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் மேற்படி ஜெனிவாக் கூட்டத்தொடரில் பங்குபற்றுவதில்லை என்று உறுதியான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

## ஐ.நா. அமைதிகாக்கும்...

அவருக்கு ஆவணங்கள் எதுவும் கொடுக்கப்படவும் இல்லை என இராஜதந்திரிகள் கூறினர். ஐ.நா.வின் அமைதிகாக்கும் படைக்கு ஆசிய பசுபிக் நாடுகள் சவேந்திர சில்வாவை நியமனம் செய்தபோது மனித உரிமைக்கான பல குழுக்கள் ஆட்சேபம் தெரிவித்தன. இந்த விசேட ஆலோசனைக் குழுகூட்டத்துக்கு தலைமை வகித்த ஒரு கனேடிய அதிகாரி இந்த குழுவின் செயற்பாடுகளில் சவேந்திர சில்வா பங்கு பற்றமாட்டார் என தனது உரையின்போது கூறினார்.

மனித உரிமைகள் குழுக்கள் மற்றும் ஐ.நா. நிபுணர்களின் கூற்றுப்படி 2009 ஆம ஆண்டு ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்ததாக கூறப்படும் தமிழ் பிரிவினைவாதிகளுடனான யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தார் என சில்வா மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

கூட்டத்துக்கு தலைமை வகித்த லூயிஸ் பிறெச்செட் ஏனைய குழு அங்கத்தவர்களுடன் கலந்தாலோசித்த பின், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிடம் சென்று அவர கூட்டத்தில் இருப்பது ஏற்புடையது அல்ல எனவும் ஆலோசனைக் குழுவின் நோக்கத்துக்கு உதவக்கூடியது அல்ல எனவும் கூறி அவரிடம் கூட்டத்தில் பங்குபற்ற வேண்டாம் என கூறினார். முன் னர் ஐ.நா. பிரதி செயலாளர் நாயகமும் உயர்மட்ட கனேடிய இரா ஜதந்திரியுமான பிறெட்செட்டை இக்குழுவுக்கு தலைமை தாங்குமாறு பான் கீ மூன் நியமித்தார்.

பிறெச்செட் இவ்வாறு செய்திராதுவிடின் இந்த விசேட ஆலோசனைக் குழு கலைந்து போயிருக்கும். சவேந்திர சில்வா குழுவில் இருப்பதை ஒருவரும் விரும்பவில்லை என பெயர் குறிப்பிட விரும்பாத இராஜதந்திரி ஒருவர் கூறினார். அதேவேளை ஐககிய நாடுகள் அமைதிகாப்புப் படையின் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் தமது யங்களிப்பு தடைசெய்யப்பட்டதாக வெளியான தகவலை ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா மறுத்துள்ளார். அவ்வாறான நடவடிக்கைகளை எவையும் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது கூட்டத்தில் இடம்பெறவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தாம் கூட்டத்தில் பங்கேற்றதாகவும் நேற்றும் இன்றும் அந்த கூட்டத்தில் தாம் பங்கேற்கவுள்ளதாகவும் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். தாம், ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் இருந்து தடுக்கப்பட்டதாக விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான செய்தி நிறுவனங்களே செய்தி வெளியிட்டதாகவும் சவேந்திர சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

## உணவகங்களுக்கு...

ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள், பேக்கரிகள் உள்ளிட்டவை அடங்குகின்றன. இதன்படி ஏச்.ஏ.100 எனும் புதிய மதிப்பீட்டு மீளாய்வுப் படிவம் மூலம் உணவகங்களின் தரத்தினை மதிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நடைமுறையில் இருந்துவந்த தர மதிப்பீட்டு முறையில் காணப்பட்ட குறைபாட்டை அடுத்து புதிய திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. இது குறித்து கடந்த வருடம் மார்ச் மாதம் வர்த்தகர்களுக்குப் பயிற்சியும் வழங்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதில் தரம் குறைந்த உணவகங்களை திருத்தி மாற்றியமைக்க கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி 75 புள்ளிகளுக்கு மேல் ஏ தரமும், 75 புள்ளிக்கு 50 புள்ளிக்கும் இடையில் பி தரமும், 50 புள்ளிக்கும் 25 புள்ளிக்கும் இடையில் சி தரமும், 25 இற்கும் குறைவாக டீ தரமும் உணவு கையாடல் நிலையங்களுக்கு வழுங்கப்பட்டுள்ளன. ஏ,பி,சி, ஆகிய தரங்களைவிட டீ தர உணவுகையாடல் நிலையங்களை இயங்கவிடாது சட்டநடவடிக்கைக்கு உட்படுத்துவதுடன் அவற்றைத் திருத்தியமைத்து தரம் மாறும் பட்சத்திலேயே மீள இயங்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக உணவு கையாடல் நிலையங்களைத் தரப்படுத்தும் முறை ஏற்கனவே பொலநறுவையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியளித்திருக்கிறது. தற் சயம் அது யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். நேற்று முன்தினம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# பச்சிலைப்பள்ளியில் எரிபொருள் மானியம் மக்களின் நலனுக்கு பங்களிப்பு



(பளை)

ஆளும்கட்சியில் அங்கம் வகித்தபோதும் எரிபொருள் விலையேற்றத்திற்கு மானியம் வழங்கக்கோரி நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் மக்களின் நலன்களுக்காக குரல் கொடுத்தவர் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

புலோப்பளை மேற்கு கிராம மக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்திற்கான முத்திரைகளை நேற்று வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்பிரிவில் முதற்கட்டமாக புலோப்பளை மேற்கு கிராம மக்களின் 94 குடும்பங்களுக்கு இம்முத்திரைகள் வழங்கப்பட்டன.

இவற்றை பிரதேச செயலர் முகுந்தன், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பிரதேச சபையின் திட்டமிடல் அதிகாரி ஆகியோர் வழங்கினர்.

இதேவேளை கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலும் மண்ணெண்ணெய் மானிய முத்திரை விநியோகம் நேற்று முன்தினம் ஆரம்பமானது. சுமார் 19ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட இப்பிரதேசத்தில் 42 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன.

இதில் இதுவரை மின்சார இணைப்புக்களை பெறாத கிராமங்கள் இம் மண்ணெண்ணெய் மானியத்தை பெறுகின்றன.

அதற்கமைய நேற்று கிருஸ்ணபுரத்தைசேர்ந்த 205 குடும்பங்களுக்கு முத்திரைகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் மாதமொன்றுக்கு 200 ரூபா பெறுமதியான மண்ணெண்ணையினை மக்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

# இலங்கை இப்போது ஊழல் நிறைந்த நாடு

(கொழும்பு)



ராஜபக்ஷ நிர்வாகத்தின் மூலம் தர்மத்தீவு ஊழல் தீவாக மாறியுள்ளதென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆசிய வலயத்தில் காணப்படும் ஊழல் நிறைந்த நாடாக இலங்கை மாறியுள்ளதாகவும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் என்பன ஊழல் மிகுந்த நாடாக இருக்கிறபோதும் அவற்றையெல்லாம் விஞ்சி, இலங்கை சென்றுவிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நிர்வாகிகள் நாட்டை அவ்வாறான நிலைக்கு கொண்டு செல்கிற போது அதற்கான நட்டஈட்டை பொது மக்களே செலுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

தேசிய தொழிற்சங்க அலுவலகத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தை நேற்று ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தர்மத் தீவில் நீதி, நேர்மை, நியாயம் என்ற மூன்று கோட்பாடுகள் காணப்படும் எனத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், ஊழல் தீவில் அநியாயம், மோசடி, ஊழல் என்ற மூன்று கோட்பாடுகள் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க இணையத்தை கொண்டுநடத்த அரசாங்கம் இடமளிக்குமா என தனக்கு தெரியாது எனவும் இணையத்தின் தயாரிப்பாளரை அறிமுகம் செய்தால் வெள்ளை வான் ஒன்று வரக்கூடும் எனவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

# மீதிப் பணத்திற்கு ரொபி வழங்கினார் நடத்துநர் மீது விசாரணை ஆரம்பம்

103 ஆம் இலக்க புறக்கோட்டை - பொறளை பிரதேசங்களுக்கு இடையிலான சேவையில் ஈடுபடும் பஸ் நடத்துநர் ஒருவர், மீதி காசுக்குப் பதிலாக பயணியொருவருக்கு ரொபி வழங்கிய சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது சட்டவிரோதமான ஒரு நடவடிக்கை என்பதுடன் ஒழுக்கமற்ற செயலாகும் என்றும் சம்பந்தப்பட்ட பஸ் சாரதிக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.

இதேவேளை, அடுத்த மாதம் முதல் முற்கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தும் இலத்திரனியல் அனுமதி அட்டைப் பாவனை இயந்திரத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# படையினர் பயன்படுத்திவரும் சொத்து விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் படையினர், பொலிஸ், கடற்படையினர் முகாமிட்டு பயன்படுத்தும் காணிகள், கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களின் விபரங்கள் கிராம சேவையாளர்களால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் பணிப்பின் பேரில் பிரதேச செயலகங்கள், ஊடாக கிராம சேவையாளர்கள் மூலம் இந்த விபரங்கள் திரட்டப்படுகின்றது.

குறிப்பிட்ட காணி, கட்டடங்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களின் முழுப் பெயர், தற்போதைய முகவரி, தொலைபேசி இலக்கம், உறுதி அல்லது அனுமதிப்பத்திரம், கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலக பிரிவு உள்ளிட்ட பல்வேறு விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்யுமாறு கிராம சேவையாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

இது தவிர காணி, கட்டட, வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் அல்லது நிறுவனத்தினரின் தற்போதைய தீர்மானமான வாடகை கோரல், சொந்தக் காணி, வீடு அல்லது வர்த்தக நிலையங்கள் மீண்டும் தேவை, இவற்றில் இவ்வளவு காலம் இருந்தமைக்கான வாடகையுடன் குறிப்பிட்ட சொத்துக்களை ஒப்படைத்தல் அல்லது இவை தொடர்பாக எதுவிதமான முடிவுகள் இல்லை போன்றவறறையும் தெரிவிக்குமாறும் மேலும் கோரப்பட்டுள்ளது.

படையினர், பொலிஸார், கடற்படையினர் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகக் குறிப்பிட்ட காணிகள், வீடுகள், வர்த்தக நிலையங்களில் நிலைகொண்டுள்ள நிலையில் இவற்றின் உரிமையாளர் பலர் வெளி மாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் தங்கியுள்ளனர். இவர்களைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் கிராம சேவையாளர்கள் உள்ளனர்.

எனினும் இவற்றின் உரிமையாளர்கள் உள்ளூரில் வசிப்பின் சம்பந்தப்பட்ட பகுதி கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களைத் தெ[illegible]விக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

# பயணியை துரத்திச்சென்று மிகுதி கொடுத்த நடத்துநர்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் கடந்த வாரம் தனியார் பஸ்ஸில் ஏறிய பயணி ஒருவர் தனது இறங்குமிடம் வந்ததும் மிகுதிப் பணத்தை வாங்காது மறந்து சென்று விட்டார். இதை அவதானித்த நடத்துநர் அப்பயணியைத் துரத்திச்சென்று மிகுதிப்பணமான 468 ரூபாவை உரியவரிடம் ஒப்படைத்திருக்கிறார்.

அளவெட்டியில் இருந்து யாழ்ப்பாணத்திற்குச் சேவையில் ஈடுபடும் வட பிராந்திய போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான பேருந்தின் நடத்துநரின் இச்செயல் இக்காலத்திலும் இவ்வாறானவர்கள் இருக்கிறார்களா என அங்கிருந்தவர்களைப் பேச வைத்திருந்தது.

# ஊடகத்துறை அமைச்சருக்கு ஆறு சத்திர சிகிச்சைகள்

அவுஸ்ரேலியாவில் தான் தங்கியிருந்த ஹோட்டலின் மாடியிலிருந்து தவறி விழுந்ததால் காயமடைந்த தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதுவரை அவருக்கு 6 சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அமைச்சரின் கால்களில் ஏற்பட்டுள்ள காயங்கள் காரணமாகவே தொடர்ச்சியான சத்திரசிகிச்சைகள் அவருக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# மூன்றரை வயதுச் சிறுமி புத்தளத்தில் கடத்தல்

(கொழும்பு)

புத்தளம் - முந்தல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பகல் மூன்றரை வயது பாலர் பாடசாலை சிறுமி ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளார். தினமும் சிறுமியை அழைத்துச் செல்ல வரும் பாட்டி, அன்று வரவில்லை என பாலர் பாடசாலையின் நடத்துனர் தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலாக சிறுமியின் மாமா எனக் கூறிக் கொண்டு ஒருவர் வந்து சிறுமியை அழைத்துச் சென்றதாக பாலர் பாடசாலை நடத்துனர் பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளார்.

சிறுமி குறித்து இதுவரை எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் எஸ்.சுவஸ்திகா என்ற பெயருடைய சிறுமி காணாமல் போயுள்ளதாகவும் சிறுமியை கண்டுபிடிக்க புத்தளம் பொலிஸ் நிலையத்தால் இரு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் வங்கிக் கடன் வழங்கல் கொள்ளையடிக்கும் நோக்கமல்ல

## மத்திய வங்கி வடக்கு முகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்களுக்கு கடன் வழங்குவதற்காக தென்பகுதி வங்கிகளிடமிருந்து கடனாக நிதி பெறப்படுவதாகவும் இதன் மூலமாகவே வடக்கில் செயற்படும் வங்கிகள் தமது கடன் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துகின்றன என்று மத்திய வங்கியின் வடமாகாணக் கிளை முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் தெரிவித்தார்.

வட பகுதி மக்களின் பணத்தை வங்கிகள் கொள்ளையடிப்பதாக வெளியான தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என இலங்கை மத்திய வங்கியின் வடமாகாணக் கிளை முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் என்.டீ.பி, எச்.எஸ்.பி.சி, இந்திய வங்கி, உள்ளிட்ட பல வங்கிகள் மற்றும் லீசிங் கம்பனிகள், காப்புறுதி நிறுவனங்கள் தமது கிளைகளை யாழ்.மாவட்டத்தில் நிறுவியுள்ளன. இதனையடுத்து, இந்த வங்கிகள் அனைத்தும் யாழ் மக்களின் பணத்தை கொள்ளையடிப்பதாக சிலர் கருதுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் வடமாகாணக் கிளை முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் வடபகுதி மக்கள் தமது வாழ்வாதாரத் தேவைகளுக்காக வங்கிகளில் சேமித்து வைத்திருந்த தமது பணத்தை மீளப்பெற ஆரம்பித்து விட்டதால் வங்கிகளில் பணப்புழக்கம் குறைவாகக் காணப்படுவதால் ஏராளமான மக்களுக்கு தவணைமுறை வங்கிக் கடனை வழங்கமுடியாதுள்ளதாகக் குறிப்பிட்ட வங்கி முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர், வட பகுதி மக்களின் நன்மை கருதி தென்னிலங்கை வங்கிகளிடம் இருந்து வங்கிக் கடன்கள் பெற்றுக் கொடுக்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

ஊடகங்கள் இவ்வாறு பொய்யான தகவல்களை வெளியிடுவதால் தென்னிலங்கை மக்களுக்கும் வட பகுதி மக்களுக்கும் இடையில் பேணப்படுகின்ற நல்லிணக்கம் பாதிக்கப்படுவதாகவும் இலங்கை மத்திய வங்கியின் வடமாகாணக் கிளை முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் மேலும் தெரிவித்தார்.

### வாவியில் மூழ்கி இரு இளைஞர்கள் பலி

(கொழும்பு)

கம்புறுபிட்டி, லெனபடு வாவியில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. மாத்தறை தனியார் நிறுவன ஊழியர்கள் சிலர் சுற்றுலா சென்றிருந்த வேளை இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகள் லெனபடு வாவியில் தோணியில் சென்ற போது தோணி கவிழ்ந்து இருவர் உயிரிழந்துள்ளனர். விபத்தில் 19 மற்றும் 22 வயதுடைய இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.